Registered as a news paper.
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றும் நாளையும்
திருமறைக் கலாமன்றம்
தயாரித்து வழங்கும்
கம்பன் மகன்
(நாட்டுக்கூத்து)
மாலை 7.00 மணிக்கு மன்ற அரங்கிற்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
- திருமறைக் கலாமன்றம்.
(சி-625)


மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 17 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்ஹிஜ்ஜா 26 (01.03.2003) சனிக்கிழமை இதழ் :150

## ஒஸ்ரின் - கருணா மட்டக்களப்பில் நேரில் சந்திப்பு

## கண்காணிப்புக்குழு, யுனிசெப் பிரதிநிதி பங்கேற்பு



கருணா வரவேற்கிறார்.



ஹொவ்டே - கருணா பேச்சு.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதி கேணல் கருணாவுக்குமிடையிலான சந்திப்பு நேற்றுக்காலை 10 மணிக்கு மட்டக்களப்பு வவுணதீவு பிரதேச செயலக மண்டபத்தில், இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொண்ட் புறூவ் ஹொவ்டே தலைமையில் இடம்பெற்றது.

அரசு - புலிகள் சமாதான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு ஓராண்டு நிறைவுபெற்றதன் பின், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவும், தமிழீழ விடுதலைப் புலிகளின் கிழக்குப் பிராந்தியத் தளபதி கேணல் கருணாவுக்குமிடையிலான முதல் சந்திப்பு இதுவாகும்.

இந்நிகழ்வில் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொண்ட் புறூவ் ஹொவ்டே, இப்பதவியைப் புதிதாகப் பதவியேற்கும் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் ரெலவ்சன், யுனிசெப் அதிகாரி ஒருவர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தின் முதல் அமர்வின் போது இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவரைத் தற்போது பதவியிலி

(12 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



இந்தியாலே வைச்சே அறிக்கை கையளிப்பெண்டால் இறுக்கம் பழசு தான்போல...

### உலக வங்கி அதிகாரிகள் இரணைமடுவுக்கு விஜயம்

உலக வங்கி அதிகாரிகள் குழுவினர் நேற்று வன்னியின் பல பகுதிகளுக்கும் விஜயஞ்செய்து நிலைமைகளை நேரில் அவதானித்தனர்.

நேற்றுக்காலை கிளிநொச்சியிலுள்ள சிறான் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பங்குபற்றிய இவ் அதிகாரிகள் குழுவினர், அங்கிருந்து புறப்பட்டு பல பகுதிகளுக்கும் சென்றனர். குறிப்பாக இரணைமடுக் குளத்தை நேரடியாகச் சென்று பார்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கு புனரமைப்பு நிதியம்;

# கிளிநொச்சியில் முத்தரப்பும் கைச்சாத்து!

## உட்கட்டுமானப் பணி ஆராய ஜப்பானிய குழு யாழ். விஜயம்

உட்கட்டமைப்பு கட்டுமானம் தொடர்பான அவதானிப்புக்களை மேற்கொள்வென ஒன்பது பேர் கொண்ட ஜப்பானியர் குழுவொன்று நேற்று யாழ்ப்பாணம் வருகைதந்துள்ளது.

நீர் விநியோகம், வீதி அபிவிருத்தி, மின் விநியோகம் போன்ற உட்கட்டுமானப் பணிகள் குறித்து இவர்கள் விரிவாக ஆராய்ந்தனர். இன்று யாழ். செயலகத்தில் இது தொடர்பான அதிகாரிகளையும் இக்குழுவினர் சந்திக்கவுள்ளனர். (ரா)

## உடன்பட்ட விடயங்களில் இழுத்தடிப்பு நம்பிக்கையீனத்தைத் தருகின்றது

### அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

உடன்பட்ட விடயங்கள், நடைமுறைப்படுத்தப்படாது இழுத்தடிப்பது அதிருப்தியையும், சலிப்பையும், நம்பிக்கையீனத்தையும் ஏற்படுத்தியது போலத்தான் எங்களுக்குள்ளது.

- இவ்வாறு, தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார். நேற்று சிறான் கூட்டத்தின் முடிவில் கிளிநொச்சியில் செய்தியாளர்களிடம் அவர் இக்கருத்தைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாமும் இந்தச் சந்தர்ப்பத்தில் எம்மு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனரல் நம்பியாரின் அறிக்கை மிலிந்தவிடம் ஒப்படைக்கப்படும்!

வடபகுதியில் உள்ள, அதியுயர் பாதுகாப்பு வலயங்களிலிருந்து இராணுவத்தை அகற்றுவது தொடர்பாக, ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள இந்திய முன்னாள் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சதீஸ் நம்பியாரின் அறிக்கை அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் ஒப்படைக்கப்படவுள்ளது என்று தெரியவருகிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு -புலிகள்-உலகவங்கி பிரதிநிதிகள் உடன்பாடு

(கிளிநொச்சி)

**வடக்கு - கிழக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் அபிவிருத்திக்காக வடக்கு - கிழக்கு புனரமைப்பு நிதியம் ஒன்றை அமைப்பதற்கு முன்னோடியாக நேற்று கிளிநொச்சியில் உலக வங்கிக்கும் சிறான் அமைப்புக்கும் இடையே உடன்பாட்டுக் கடிதம் பரிமாறப்பட்டது. கடந்த இரு நாட்களாக நடைபெற்ற சிறான் கூட்டத்தின் முடிவில், நேற்று இம்முன்னோடி உடன்படிக்கை கைச்சாத்தாகியுள்ளது. முழுமையான ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.**


வடக்கு-கிழக்கு புனரமைப்புக்கான நிதியைக் கையாளுமாறு இவ்வாண்டின் ஆரம்பத்தில் அரசும் புலிகளும் கேட்டுக்கொண்டதற்கமைய, உலகவங்கி இந்நிதியத்தினைக் கையாளும் பொறுப்பை ஏற்றுள்ளது.


நேற்றுக்காலை 10 மணியளவில் சிறான் அலுவலகத்தில் இந்த உடன்படிக்கை கைச்சாத்தானது. இதில் அரச தரப்பில் சமாதானச் செயலணியின் பணிப்பாளர் பேணாட் குணதிலகவும், விடுதலைப் புலிகள் தரப்பில் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனும், உலகவங்கி சார்பில் அதன் நிர்வாகப் பணிப்பாளர் சங்மான் சாங்கும் கையொப்பமிட்டனர்.

போரினால் பாதிக்கப்பட்ட உள்ளூரில் வசிக்கும் மக்களுக்கும், இடம்பெயர்ந்து மீள்குடியேறிய மக்களுக்கும் உதவிகளை சிறான் அமைப்புக்கு வடக்கு-கிழக்கு புனரமைப்பு நிதியம் உதவிவழங்கும். உதவி வழங்கும் நாடுகளின் நிதியுதவியை உலகவங்கி கையாளும்.

கல்வி, சுகாதார வசதிகளுக்கும் நகர, கிராமிய உட்கட்டுமானப் பணிகளுக்கும் வடக்கு-கிழக்கு புனரமைப்பு நிதியம் உதவிவழங்கும். அதேபோன்று

(12 ஆம் பக்கம் பார்க்க)





விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளரும், அரசின் சமாதானச் செயலகப் பணிப்பாளரும் கைச்சாத்தான கடிதங்களை உலக வங்கிப் பிரதிநிதியுடன் பரிமாறிக்கொள்வதை முறையே முதலாம், இரண்டாம் படங்களில் காணலாம்.

SERENDIB AIRLINE
யாழ்ப்பாணத்தில் இருந்து வெள்ளவத்தை வரையும் அழையுங்கள்
(சி-626)
021-2223916, 0777-517019, 01-505632, 074-612656, 01-390128.

# அத்துமீறுவோரை விட்டு விட்டு எம்மைத் தாக்குவது விஷமம்!

## கடற்படைத் தாக்குதலுக்கு மீனவர் விசனம்

(யாழ்ப்பாணம்)

கடற்படையினரின் தொடர் தாக்குதலால், தமது தொழிலை சுதந்திரமாக செய்யமுடியாத நிலைக்கு ஆளாகியுள்ளதாக வல்வெட்டித்துறை மீனவர்கள் விசனம் தெரிவிததனர்.

கடந்த 25 ஆம் திகதி, மாதகல் கடற்பரப்பில் வைத்து மீனவப் படகு கடற்படையினரின் டோறாப் படகினால் தாக்கப்பட்டதையடுத்து, மாதகல் கடலிற்குச் செல்ல மீனவர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இது மீனவர்களை இலக்குவைத்து வேண்டுமென்றே நடாத்தப்படுகின்ற தாக்குதலாகும். இதனால் அப்பாவி மீனவர்களே மிகவும் பாதிப்படைகின்றனர். கடற்படையினரின் இதுபோன்ற செயல்களினால் சுதந்திரமாக கடலிற்குச்சென்று திரும்பமுடியவில்லை. இது போன்ற தாக்குதலால், மீன்பிடி உபகரணங்கள் அழிக்கப்பட்டுள்ளன. அத்துடன், இந்திய மீனவர்களின் படகுகள் அத்துமீறி மீன்பிடித்துக் கொண்டு செல்கின்றன. அவர்களை விட்டு விட்டுத் தம்மைத் தாக்குவது விஷமத்தனமான செயல் என அப்பகுதி மீனவர்கள் மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, மாதகல் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் தாக்கப்பட்ட இரு மீனவர்களும் மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் நேற்றுமுன்தினம் முறையிட்டுள்ளனர்.

இதுகுறித்து தாம் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினிடம் முறையிடச் சென்றபோது, அவர்கள் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு செல்லும்படி கூறியதாகவும் அவர்கள் தெரிவித்தனர். (ரா)


குருக்கள், துறவிகள், இறைமக்களுக்கு

**ஒரு நற்செய்தி**

இந்தியாவிலுள்ள போட்டா இறை தியான இல்லத்திலிருந்து வருகைதரும் வழிகாட்டிகளால் நடத்தப் படும். 3 நாள் இறை தியானம்

கொழும்பு லசேலியன் தியான இல்லத்தில் மார்ச் 13 முதல் 15 வரை

இந்தியாவுக்குச் சென்று இத்தியானத்தில் பங்குபற்றமுடியாதவர்களுக்கு ஒரு அரிய சந்தர்ப்பம்.

3 நாள் இருப்பிட,உணவு செலவு ரூ600
(பயணச் செலவு தனி)

பாவ வாழ்விலிருந்து விடுதலை பெற,
கஷ்டங்கள் கவலைகள்நீங்க
உடல்,உள ஆன்மீக அமைதி பெற

**ஒரு உன்னத சந்தர்ப்பம்**

தொடர்புகளுக்கு:-
அருட்திரு ப.ஜெபரட்ணம் T.P 2222482
அருட்திரு அ.லோரன்ஸ் T.P 2223689
(பயண ஒழுங்குகள் செய்யப்படும்.)

குறிப்பிட்ட தொகையினருக்கே இடமுள்ளதால் விரைவில் தொடர்பு கொள்ளவும்

இறைதியான குழுவினர் (சி-629) ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.


# முஸ்லிம் மீள்குடியேற்றத் திட்டம் சிறான் கூட்டத்தில் முன்வைப்பு

(கிளிநொச்சி)

வடபகுதி முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக நேற்று முன்தினம் நடந்த சிறான் கூட்டத்தில் கலாநிதி எஸ்.எச்.ஹிஸ்புல்லா தனது சில கோரிக்கைகளை முன் வைத்தார்.

மேற்படி, திட்டத்தின் அடிப்படையில், தொண்ணூறாயிரம் முஸ்லிம் மக்களை எழுபத்தைந்து இடங்களில் மீளக்குடியமர்த்த வேண்டியுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மீளக்குடியமரவுள்ள முஸ்லிம் மக்களுக்கு, உடனடியான மனிதாபிமானத் தேவைகள், புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பான தேவைகளைக் கவனிக்க ஆவன செய்யப்பட வேண்டும். முஸ்லிம் மக்களது பொருளாதார உட்கட்டமைப்பு மற்றும் வாழும் பகுதிகளை மீளப் புனரமைக்க வேண்டும். இடம் பெயர்ந்த முஸ்லிம் மக்களது உடமைகள் தொடர்பான உதவிகள் வழங்கப்படவேண்டும் என அவர் கேட்டுக்கொண்டார்.

மேலும், இடம்பெயர்ந்து தற்பொழுது மீளக்குடியமரவுள்ள முஸ்லிம் மக்கள் தங்களது சொந்தக்காலில் நின்று தமது வாழ்வினை மீள அமைப்பதற்கு ஆவன செய்யப்பட வேண்டும். தமிழ் மக்களுக்கும் - முஸ்லிம் மக்களுக்கும் இடையே மீள் இணக்கப்பாட்டுச் செயன்முறை ஆரம்பித்து, தற்பொழுது நிலவும் சமாதானச் சூழலை மேலும் ஸ்திரப்படுத்த வேண்டும் என்பதான கோரிக்கைகளையும் அவர் தனது திட்டத்தில் குறிப்பிட்டார்.


**திறைஞ்சனாஸ்** சங்கானை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
இரவு 9.30 (விசேட காட்சி இன்று மட்டும்)
அஜித், மாளவிகா நடித்த

**உன்னைத்தேடி**

இரவு 12.30 மட்டும் விசேட காட்சி

**U 571**

நீர்மூழ்கிக் கப்பலில் நடைபெற்ற அதிரடித் தாக்குதல் நிறைந்த படம். (சி-627)



**ராஜா** யாழ்ப்பாணம்.

7 ஆவது ஜனத்திரள் வாரமாக



விஜய், ஸ்நேகா, மணிவண்ணன், வடிவேல் நடித்த

**வசீகரா** காலை 10.30, 2.30 மட்டும்

சிவராத்திரியை முன்னிட்டு விசேட காட்சியாக இன்று மட்டும்
அஜித், சிம்ரன், கவுண்டமணி, செந்தில்

**அவள் வருவாளா**

இரவு 6.30, 9.30, நள்ளிரவு 1.30 மட்டும் (சி-628)



**அரியாலை சந்தை மாட்டிறைச்சிக் கடை**

**திறப்பு விழா**

திகதி - 02-03-2003 ஞாயிற்றுக்கிழமை
நேரம் - காலை 7.00 மணி

வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்கள் அனைத்தும் விற்பனைநடைபெறும்.

(265) உரிமையாளர்: கி.தனபாலன்.


### பிரதேச செயலகங்களுக்கு இடையிலான விளையாட்டு விழா

யாழ். மாவட்ட பிரதேச செயலகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா, எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் மே மாதம் 4 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

செயலக மட்ட இவ்விளையாட்டு விழாவில் பிரதேச செயலக விளையாட்டுக்களில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்கள் பங்குபற்றவுள்ளனர். இவ்விளையாட்டு விழா தொடர்பான போட்டிகள் அனைத்தும் யாழ். துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (13)


## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

நாவற்குழி, கைதடியைச் சேர்ந்த சி.செல்லத்துரை என்பவரது ஆவணங்கள் அடங்கிய கறுத்தப் பை ஸ்ரான்லி வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் குறித்தவரிடம் அல்லது பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 'நமது ஈழநாடு', 267, நாவலர் வீதி. யாம்ப்பாணம். (264)



**குறைந்த விலையில் நிறைந்த தரம்**

**ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனத்தின்**

- சுத்திகரிக்கப்பட்ட அயடீன் கலந்த பைக்கற் உப்பு ( 01 Kg)
- அயடீன் கலந்த மேசை உப்பு (400g)
- கருவாட்டு கல் உப்பு, கருவாட்டு அரைத்த உப்பு

**குறைந்த காலத்தில் குறையில்லாத சேவை**

**யாழ். - கொழும்பு - யாழ்.**

- விமானப் பயணச்சீட்டு முகவர்
- வெளிநாடுகளுக்கான பொதி பரிமாற்றல் சேவை
- CROWN BISCUIT ஆகியவற்றின்

யாழ். மாவட்ட விநியோகஸ்தர்.

**S.P.O என்ரபிறைசஸ்**

110, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

மேலதிக விபரங்களுக்கு: Tel./Fax - 021-2225220

(சி-631)

## சின்னஞ் சிறு செய்திகள்

### பான்ட் வாத்தியக் கருவிகள் அன்பளிப்பு

(நவிண்டில்)

யாழ்.தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் தனது நிதி ஒதுக்கீட்டிலிருந்து பான்ட் வாத்திய இசைக்கருவிகளை அண்மையில் வழங்கியுள்ளார். நீண்டகாலமாக இக்கல்லூரிக்கு பான்ட் வாத்திய இசைக்கருவி இல்லாத குறை நிலவிவந்தது.

### கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(நவிண்டில்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை எல்லைக்குள் கட்டாக்காலி நாய்கள் மருந்தூட்டி அழிக்கப்பட்டன. இந்நாய்களினால் நோயாளருக்கும், நோயாளர்களைப் பார்வையிட வரும் பொதுமக்களுக்கும் பெரும் சிரமம் ஏற்பட்டுவந்தது குறிப்பிடத்தக்கது.

### முரசுமோட்டையில் கூரைத்தகடு உற்பத்தி

(சரசாலை)

தமிழர் புனர்வாழ்வுக் கழகததின் ரால் - சீமெந்து, மண், தும்பு போன்றவற்றைப் பயன்படுத்திக் கூரைத்தகடுகள் உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன.

2 அடி நீளம் கொண்ட இக்கூரைத்தகடுகள் குறைந்த நிறையை கொண்டனவாகக் காணப்படுகின்றன. முரசுமோட்டையில் இவ்வுற்பத்தி இடம்பெற்று வருகின்றது.

இதன் மூலம் பலர் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளதாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவித்துள்ளது. (34)

### நாளை ஏ-9 வீதி 6.30 வரை திறந்திருக்கும்

சிவராத்திரியை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை இராணுவச் சோதனைச் சாவடிகள் திறந்திருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏ-9 வீதி மற்றும் உயிலங்குளம், மடு சோதனைச் சாவடிகளும் நாளை திறந்திருக்கும் என்றும் -

அத்துடன், நாளை மாலை 6.30 மணிவரை ஏ-9 சோதனைச் சாவடிகள் திறந்திருக்கும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஜீவாகாரம் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி பிரதேசசபைக்கு உட்பட்ட சுகாதார சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை பெறவரும் கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்கள், ஒருவயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குக் கரவெட்டிப் பிரதேசசபையினால் வழங்கப்பட்ட "ஜீவாகாரம்" என்ற சத்துமா பைக்கற் அண்மைக்காலமாகக் குடும்பநல உத்தியோகத்தரினால் விநியோகிக்கப்பட்டு வருவதாகப் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைச் சுகாதார வைத்திய அதிகாரி ந.ஜே.ஞானசுதன் தெரிவித்தார். (116)

### உதைபந்தாட்டப் போட்டி

(பாஷையூர்)

இலங்கை தேசிய உதைபந்தாட்ட அணியில் பங்குகொள்ளும் நான்கு வீரர்களை உள்ளடக்கியதும், வர்த்தக உதைபந்தாட்டப் போட்டியில் சம்பியனுமாகிய ரவல்ஸ் அணிக்கும் - யாழ்ப்பாண லீக் நடத்திய போட்டியில் சம்பியனான குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டி இன்று பி.ப.4.00 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ளது. (119)

### விடியோ படக்காட்சி

யாழ்.பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புக்கள அலகும், திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப்படக் காட்சித் தொடரில் ரஞ்ஜித் தாஸ் (**Ranjit Das**) இயக்கிய ஒரிய மொழிப்படமான **SANSKAR** (சந்ததி), மஞ்சுஸ்ரீ பண்டா பங்குபற்றிய ஒடிசி நாட்டியப் படமும் நாளை காலை 10 மணிக்குப் புவியியற்துறை மண்டபத்தல் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன்பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இந்திய நிபுணர் உதவியோடு

# விசேட பாதுகாப்பு படைப் பிரிவு

(கொழும்பு)

இந்திய பாதுகாப்பு நிபுணர்களின் ஆலோசனையின்படி அமைக்கப்பட்ட இலங்கை அரசாங்கத்தின் விசேட பாதுகாப்புப் படை தனது செயற்பாட்டை ஆரம்பித்துள்ளது.

புரொரெக்ரிவ் செக்யூரிட்டி றேஞ் (**Protective Security Range - PSR**) என அழைக்கப்படும் இந்தப் படையணி - மிக முக்கிய அரசியல்வாதிகளுக்குப் பாதுகாப்பு வழங்கவுள்ளது.

அதேவேளை - நாட்டிற்குள் வரும் உயர் பிரமுகர்களுக்கும் இந்தப் படையணியே இனிப் பாதுகாப்பு வழங்கும் எனத் தெரியவருகின்றது.

இந்தப் படையணி - நாட்டிலுள்ள பாதுகாப்புப் படைப்பிரிவுகளில் மிகச் சிறந்த செயற்பாட்டுத்திறன் கொண்டதெனவும்,

அதேவேளை - கிரிமினல் குற்றச் சாட்டுக்களுக்கு ஆளாகியுள்ள ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவுடன் இது எவ்விதத்திலும் தொடர்பு கொண்டிருக்கவில்லை எனவும் அரசாங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

பிரதமரின் பாதுகாப்புப் பிரிவு மற்றும் அமைச்சர்கள் பாதுகாப்புப் பிரிவு ஆகியவற்றை உள்ளடக்கி இப்படைப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. இதற்குப் பிரதமரின் பாதுகாப்புப் பிரிவின் பொறுப்பதிகாரியாக இருந்த பிரதிப் பொலிஸ்மா அதிபர் சோலங்காராச்சி பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.


## மனித உரிமை ஆர்வலரைத் தாக்கிய 2 சிறைக் காவலர்கள் இடைநிறுத்தம்

வெலிக்கடைச் சிறைச்சாலையில் வைத்து மனித உரிமை ஆர்வலர் ஒருவர் தாக்கப்பட்டது தொடர்பாக இரண்டு சிறைக்காவலர்கள் வேலையில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டனர்.

நீதிமன்ற அவமதிப்புக் குற்றச் சாட்டிற்குள்ளாகி - வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மனித உரிமை ஆர்வலர் ஒருவர் அண்மையில் சிறைக்காவலர்களால் தாக்கப்பட்டிருந்தார். இத்தாக்குதலால் காயமடைந்த இவர், பின்னர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இவர் வெலிக்கடைச் சிறையில் தனக்கு நேர்ந்தகதி குறித்து அரசாங்கத்திற்கு அறிவித்திருந்தார். இதையடுத்தே உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் உத்தரவின் பேரில் மனித உரிமை ஆர்வலரைத் தாக்கிய இரண்டு சிறைக் காவலர்களும் வேலையில் இருந்து தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருக்கின்றனர்.

இதேவேளை, இதுதொடர்பாக விசாரணைசெய்ய ஐநாவின் மனிதஉரிமை அதிகாரியான பரம் குமாரசாமி கொழும்பு வந்துள்ளார்.



மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி ஆகியவற்றின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டி அண்மையில் நடைபெற்றபோது, பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவையும் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படத்தில் காணலாம்.

### மத்தியஸ்தர் புத்தூக்க வகுப்பு

யாழ்.உதைபந்தாட்ட லீக் மத்தியஸ்தர் புத்தூக்க வகுப்பு இன்று காலை 10 மணிக்கு யாழ். துரையப்பா விளையாட்டரங்கில், ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனத்தின் மத்தியஸ்தர் போதனாசிரியரான முசீன் ஆரோவ்வினால் நடத்தப்படவுள்ளது.

இதில் மத்தியஸ்தர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (13)

# வல்வை வைத்தியசாலையில் புதிய சிகிச்சை மண்டபம்!

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் யு.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினால் 30 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்ட புதிய சிகிச்சை மண்டபத்தை இன்று காலை 10 மணிக்கு யு.என்.எச்.சி.ஆர் நிறுவன அதிகாரி திருமதி மோகன் மொறின் திறந்துவைக்கவுள்ளார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், யாழ்.அரசாங்க அதிபர் செ.பத்மநாதன், பருத்தித்துறை பரதேச செயலர் ஆ.சிவசுவாமி, கரவெட்டி பிரதேச செயலர் க.கனகரத்தினமும் மற்றும் சிறப்பு விருந்தினர்களாகப் பேராசிரியர் பி.கோபாலகிருஷ்ண ஐயர், இளைப்பாறிய நீதிபதி மு.திருநாவுக்கரசு ஆகியோரும் கலந்து கொளளவுள்ளனர்.

அத்துடன், வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்திசபையின் 12 ஆவது இலவச மூக்குக் கண்ணாடி வழங்கும் வைபவமும் இன்று இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு மட்டும் இலவசமாகக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. (17)

# ஓய்வு பெற்ற 3 மாதங்களில் ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம்!

(யாழ்ப்பாணம்)

சேவையில் இருந்து ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கான ஓய்வூதியத்தை மூன்று மாதங்களில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகப் பொதுநிர்வாக அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

தற்போது ஆசிரியர்கள் ஓய்வு பெற்று பலமாதங்களின் பின்னர் தான் ஓய்வூதியத்தைப் பெறமுடிவதாகவும், இதற்காகத் தாம் அலைந்து திரியவேண்டி இருப்பதாகவும் ஆசிரியர்களின் தரப்பில் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்துத் தகவல் வெளியிட்டபோதே அமைச்சர் வஜிர அபேவர்த்தன, ஆசிரியர்களின் ஓய்வூதியப் பணத்தை அவர்கள் சேவையில் இருந்து ஓய்வுபெற்று மூன்று மாதங்களுக்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும், மாகாணக் கல்வித் திணைக்களங்களில் இருந்து கோப்புகள் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதனாலேயே ஆசிரியர்களுக்கான ஓய்வூதியம் தாமதமடைவதாகவும் அமைச்சர் வஜிர அபேவர்த்தன மேலும் தெரிவித்தார்.

## முஸ்லிம்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக் கூடிய தீர்வு!

### அரசு முன்வைக்கும் என்கிறார் ரணில்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு முஸ்லிம் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றக்கூடிய தீர்வை அரசாங்கம் முன்வைக்கும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வடக்கு - கிழக்கு மாகாண முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களின் தூதுக்குழு நேற்று முன்தினம் நண்பகல் சந்தித்த போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இந்த தூதுக்குழுவினர் எதிர் வரும் வாரங்களில் நோர்வே தூதுவர் உட்பட இதில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பு கொள்ள இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சிவராத்திரி விழா நிகழ்வுகள்

(வடமராட்சி கிழக்கு)

அம்பன் முத்துமாரியம்மன் ஆலயத்தில் இன்று காலை சிவராத்திரி விசேட பூசைகளும், ஆராதனைகளும் நடைபெறவுள்ளன.

இரவு அம்பன் கலை மன்றத்தின் "மாலைக்கு வாதாடிய மைந்தன்" என்னும் நாடகம் மேடையேற்றப்படவுள்ளது. (17)

௨

இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்படும் மகாசிவராத்திரி விழா இன்று திருநெல்வேலி சிவன் கோவிலில் நடைபெறவுள்ளது.

இன்று காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை நாட்டில் சமாதானம் நிலைக்க வேண்டி - ஈழத்தமிழர் சைவத்தமிழ் பண்பாட்டுக் கழகத்தினரின் ஏற்பாட்டில், இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் அனுசரணையுடன், பகல் முழுவதும் 'அகண்ட நாம பஜனை' இடம்பெறவுள்ளதாக நிகழ்வின் ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

௨

சிவராத்திரியை முன்னிட்டு திருக்கேதீஸ்வர ஆலயத்தில் நடைபெறும் மகாசிவராத்திரி பூசை மற்றும் சமய நிகழ்ச்சிகளை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் நேரடி ஒலிபரப்புச் செய்யவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

௨

மறவன்புலோ ஸ்ரீவள்ளி அம்மன் ஆலயத்தில் இன்று மகாசிவராத்திரி பூசைகளில் மூன்று வருடங்களின் பின் அடியார்கள் கலந்துகொள்ள படையினர் அனுமதி வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் இவ்வாலய பூசகரை மட்டும் தினமும் பூசைக்குச் சென்றுவர படையினர் அனுமதித்திருந்தனர். இப்பகுதி பொது அமைப்புக்கள் விடுத்த வேண்டுகோளை அடுத்து மகாசிவராத்திரி உற்சவ பூசைகளுக்கு அடியார்கள் செல்ல இராணுவத்தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளதால், இன்று ஆலயத்திற்கு வந்து உற்சவ பூசையைச் சிறப்பிக்குமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுள்ளனர். (108)

௨

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் சிவராத்திரிவிழா இன்றிரவு நான்கு காலப் பூசையுடன் நடைபெறவுள்ளது. பூஜையின் இடையில் சமய சொற்பொழிவுகள், பட்டிமன்றம் ஆகிய நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. நாளை காலை நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப் பெருமானின் தீர்த்தோற்சவம் கங்கா சமுத்திரத்தில் இடம்பெறும்.

காங்கேசன்துறை வீதி வழியாகவும், சேந்தாங்குளம் வீதி வழியாகவும் பக்தர்கள் ஆலயத்தைச் சென்றடையலாம் என்றும், இதற்கான போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (72)

௨

மகாசிவராத்திரி தினமான இன்று பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கமும், புலோலி பசுபதீஸ்வர ஆலய பரிபாலனசபையும் இணைந்து சிவதீட்சை விழாவை பசுபதீஸ்வர ஆலயத்தில் நடாத்தவுள்ளனர். அத்துடன் இன்று விசேட அபிஷேக ஆராதனைகளும் இடம்பெறவுள்ளன.

இரவு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலை, புலோலி வேலாயுதம் மகாவித்தியாலயம், வட இந்துமகளிர் கல்லூரி, புலோலி கிழக்கு ஞானசம்பந்தர் கலை மன்றம் ஆகியவற்றின் மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன.

௨

திருநெல்வேலியிலுள்ள சாயி நிலையத்தில் மகாசிவராத்திரி நிகழ்வுகள் இன்று பி.ப. 6.30 மணி முதல் நாளை அதிகாலை வரை தொடர்ந்து இடம்பெறவுள்ளது.

௨

சிவராத்திரியை முன்னிட்டு நல்லூர் தேரடி 63 நாயன்மார் குருபூசை மடத்தில் விசேட வழிபாடுகள் இன்று நடைபெறவுள்ளன. நாளை காலை 7.30 மணிக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளது.

வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

ஐந்தாவது அகவையில் HAPPY BIRTHDAY



பெயர் : அ. றொசான்
முகவரி: 8 ஆம் வட்டாரம்,
நெடுந்தீவு.



பெயர் :இ.சங்கவி
முகவரி: 654/1 , F.C.S.வீதி,
யாழ்ப்பாணம்.

பல்லாண்டு காலம்
வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:----------------------------------------

முகவரி:----------------------------------------

பிறந்த ஆண்டு:----------------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளன.

------------------------
பெற்றார் ஒப்பம்


## கிழக்கு மாகாண மேல்நீதிமன்ற நீதிபதி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் சிரேஷ்ட சட்டத்தரணி எஸ்.பரமராஜா கிழக்கு மாகாண மேல் நீதிமன்றத்தின் நீதிபதி யாகப் பதவியேற்றார். இவர் பிரதம நீதியரசர் சரத் என். சில்வா முன்னி லையில் பதவியேற்றுள்ளார்.

கடந்த இரண்டு மாதமாக கிழக்கு மாகாண மேல் நீதிமன்றததிற்கு நீதி பதி எவரும் நியமிக்கப்படாதிருந்த தால், பயங்கரவாதச் தடைச சட்டத்தின் கீழ் தாக்கலான பல வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படாதிருந்தது குறிப்பிடத்தக்கது.

## கம்பன் மகன் நாட்டுக்கூத்து

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் தயா ரித்து வழங்கும் 'கம்பன் மகன்' நாட்டுக்கூத்து மன்ற அரங்கில் இன்றும் நாளையும் மாலை 7 மணிக்கு அரங்கேற்றப்படவுள்ளது.

இந் நாட்டுக்கூத்திற்கு அரங்க ஆர்வலர்கள் அனைவரையும் திரு மறைக்கலாமன்றம் அழைத்துள்ளது.

## காய்ச்சலால் குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

நான்கு தினங்களாக காய்ச் சலினால் பீடிக்கப்பட்டிருந்த குடும் பஸ்தர் நேற்றுமுன்தினம் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கபபட்டு அங்கு மரணமா னார்.

மல்லாவி யோகபுரத்தைச் சேர்நத என்.தேவசகாயம் (வயது57) என்ப வரே மரணமானவராவார்.

கடந்த நான்கு தினங்களாக காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு மல்லாவி வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்ட இவர் மேலதிக சிகிச்சைக் காக யாழ்.போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்ட சற்று நேரத்தில் மரணமானார்.

(ச)

## நீரிழிவு நோய் DIABETES

பகுதி 31

- ச.ஆ.கோபாலமூர்த்தி.

### நீரிழிவு நோயாளருக்கு மகிழ்ச்சி தரும் தகவல்கள்

இன்சுலின் பேனாவும் அதன் உதிரிப்பாகங்களும்




(1) இன்சுலின் போத்தலைத் தனியாகவும், சிரிஞ்சுத் தொகுதியைத் தனியாகவும் செல்லுமிடமெல்லாம் எடுத்துச் செல்வதற்குப் பதிலாக எல்லாவற்றையும் ஒன்றாகப் பொருத்திய நிலையில் சுலபமாக எடுத்துச் செல்லத்தக்க இன்சுலின் பேனா (**INSULIN PEN**) விற்பனைக்கு வந்துள் ளது. இதில் ஓர் யன்னலும், இன்சுலின் கூடு (**REFIL**) பொருத்துமிடமும், ஒரு திருகியும் இருக்கும். இன்சுலின் கூட்டை இப்பேனாவில் பொருத்தி, ஊசியையும் பொருத்தித் தேவையான இன்சுலினின் அளவு யன்னலில் தெரியும்வரை, திருகியபின் சிரிஞ்சினால் ஊசியை ஏற்றுவதுபோல ஏற்றிக்கொள்ளலாம். சில கம்பனிகள் ஒருதொகுதி இன்சுலின் கூடுகளை வாங்குவோருகக்கு ஒருபேனாவை இலவசமாக வழங்குகின்றனவாம்.

(2) 'இன்சுலினேற்றி' (**INSULIN INJECTOR**) விற்பனைக்கு வந் துள்ளது. தேவையான அளவு இன்சுலினை சிரிஞ்சினுள் எடுத்து, இன்சுலினேற்றியில் சிரிஞ்சைப் பொருத்திவிட்டு, அதனைத் தோலின் மீது வைத்து, ஒரு வில்லைத் தட்டியதும் அது தானாகவே ஊசியை சரியான ஆழத்துக்கு ஏற்றிவிடும்.

(3) தோலிற்குக் கீழே பொருத்தி வைக்கப்படுவதும் தானாகவே தொடர்ந்து தேவையான இன்சுலினை விடுவிக்கக்கூடியதுமான இன்சுலின் பதியம் (**INSULIN IMPLANT**) பயன்பாட்டிற்கு வந்துள்ளது.

தொடரும்...


மக்கள் வங்கி

மக்கள் வங்கி யாழ். பிரதான வீதிக்கிளையிலும், நெல்லியடிக் கிளையிலும்
31-12-1984 வரை அடகுவைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள்
யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளையில் பின்வரும் திகதிகளில்

பகிரங்க ஏலவிற்பனை

செய்யப்படும்

| கிளைகளின் விபரம் | ஏலம் விடப்படும் திகதி | ஏலம் செய்யப்படும் இடம் |
|---|---|---|
| யாழ்.பிரதரன வீதிக் கிளை | 15-03-2003 இருந்து 19-03-2003 வரை | யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளை |
| நெல்லியடிக் கிளை | 20-03-2003 இருந்து 23-03-2003 வரை | யாழ். ஸ்ரான்லி வீதிக்கிளை |

- மேலும் வாடிக்கையாளர் நன்மைகருதி புதிய வனிதா வாசனா க/கு திறக்க 08-03-2003 இல் கோலாகலமான வனிதா வாசனா நிகழ்ச்சிகள்.
- கடந்த 2002 வனிதா வாசனா சீட்டிழுப்பு அதிர்ஷ்டசாலிகளுக்குத் தங்கநாணயப் பரிசு வழங்கலும் இடம்பெறும்.
- 08-03-2003 அன்று புதிய வனிதா வாசனா கணக்கு திறப்பவர்களுக்கு புதியதோர் சீட்டிழுப்பு நடைபெறும்.
- அதிர்ஷ்டசாலிகளுக்கு கணக்கிலுள்ள தொகை இருமடங்காக்கப்படும்.
- 08-03-2003 சகல மக்கள் வங்கிக் கிளைகளும் காலை 8.30 இலிருந்து நண்பகல் 12 மணிவரை புதிய வனிதா வாசனா கணக்கு ஆரம்பித்தலும் வைப்புச்செய்தலுக்குமாகத் திறந்திருக்கும்.

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி

யாழ். பிரதேச முகாமையாளர்,
மக்கள் வங்கி.

(சி-622)

# புத்திசாலி மந்திரி

ஒரு நாட்டிலே ராஜசிம்மன் என்ற அரசன் ஆட்சி செய்து வந்தான். அவனது மந்திரிகள் மிகுந்த புத்திசாலிகள் என்று பெயர் எடுத்தவர்கள். இதனால் மந்திரிகளின் ஆலோசனைகளின்



படி ராஜசிம்மனால் நல்லாட்சியை வழங்கமுடிந்தது.

அயல்நாட்டு அரசனுக்கு இது பெரும் பொறாமையாக இருந்தது. ராஜசிம்மனின் மந்திரிகளின் புத்திக்கூர்மையை அவனது அரச சபையிலேயே கேலிக்குள்ளாக்க வேண்டும் என்று அவன் தீர்மானித்தான். தனது அமைச்சர் ஒருவரை அழைத்து மாறுவேடத்தில் ராஜசிம்மனின் அரசசபைக்குச் செல்லுமாறு பணித்தான்.

மாறுவேடத்தில் சென்றவன் ராஜசிம்மனின் அரசசபையில் மூன்று பொம்மைகளைக் கொண்டுபோய் வைத்துவிட்டு "அரசே! உங்கள் மந்திரிகள் மிகுந்த அறிவாளிகளாமே?" என ஏளனமாகக் கேட்டான்.

அதற்கு அரசன், "விரும்பினால் அதை நீயே சோதித்துப் பார்க்கலாமே" என்று கூறினான். மாறுவேடத்தில் இருந்த அயல்நாட்டு அமைச்சர், இந்த மூன்று பொம்மைகளும் ஒரேமாதிரியான வையல்ல. இவற்றுக்கிடையில் என்ன வித்தியாசம் என்று கேட்டான்.

உருவத்திலே மூன்றும் ஒரேமாதிரியாக இருந்ததில் அனைவரும் திகைத்துப் போயிருந்தனர். உடனே, ராஜசிம்மனின் மந்திரி ஒருவர் எழுந்தார். இரும்பிக் கம்பியொன்றை எடுத்து வருமாறு சேவகனிடம் உத்தரவிட்டார்.

சேவகன் கம்பியைக் கொடுத்ததும் ஒரு பொம்மையின் காதில் அதை விட்டபோது வாய்வழியாக வந்தது. இன்னொன்றின் காது வழியாக சென்ற கம்பி அடுத்த காதுவழியாக வந்தது.

ஆனால், கடைசிப் பொம்மையின் வாயில் விட்ட கம்பி வெளியே வரவில்லை. இதையடுத்து மந்திரி பேசத்தொடங்கினார். ஒரு காதில் வாங்கி மறுகாதில் வெளிவிடும் பொம்மை அலட்சியமானது. காதில் வரும் இரகசியங்களை வாயால் வெளிவிடும் பொம்மை மோசமானது. காதில் வாங்கியதை மனதில் பதித்துக்கொள்ளும் பொம்மைதான் நல்லது என்று மந்திரி சொல்ல அயல்நாட்டு அமைச்சர் தலைகுனிந்தார்.

ராஜசிம்மனின் மந்திரிகளின் புத்திசாலித்தனத்தைக் கேலி செய்ய வந்த அயல்நாட்டு அமைச்சர் - தன்தவறை உணர்ந்து அரச சபையிலிருந்து வெளியேறினார். அரசசபை மந்திரியைப் பாராட்டியது.



# சிறுவர் அரங்கம்



## ஈராக்

இப்போது வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் என எதில் பார்த்தாலும் ஈராக் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தத் தயாராவதான செய்திகள் வெளியாகின்றன. எனவே இந்த வாரம் ஈராக்கைப் பற்றி அறிந்து கொள்வோம்.

| | | |
|---|---|---|
| *தலைநகர்* | - | பாக்தாத் |
| *பரப்பளவு* | - | 4 லட்சத்து 38 ஆயிரத்து 446 ச.கி.மீ |
| *மொழி* | - | அரபு (ஆட்சி மொழி), குர்திஷ் |
| *எழுத்தறிவு* | - | 60% |
| *சமயம்* | - | இஸ்லாம் |
| *நாணயம்* | - | ஈராக் டினார். |

முன்பு மெசபதோமியா என அழைக்கப்பட்ட தேசமே இன்று ஈராக் என்ற பெயருடன் இருக்கின்றது.

1932 இல் பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் பெற்றது. மன்னராட்சி 1958 இல் முடிவுக்குவந்தது. இராணுவ ஆட்சி அமுலுக்கு வந்தது. புரட்சிக்கட்டளைச் சபைதான் ஆட்சியை நடத்துகின்றது. இதன் தலைவராக - நாட்டின் ஜனாதிபதியாக சதாம் ஹூசைன் இருந்து வருகிறார்.

1990 இல் ஈராக் படைகள் குவைத்தைக் கைப்பற்றின. இதனால் 1991 இல் அமெரிக்கா தலைமையிலான படைகள் தாக்குதல் நடத்தி குவைத்தை மீட்டன. ஈராக் மீது பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன. இப்போது மீண்டும் ஈராக்மீது தாக்குதல் நடத்த அமெரிக்கா தயாராகிவருகிறது.

*பொருளாதாரம்*

நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு பெற்றோலிய உற்பத்திதான். உலகில் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளில் ஈராக் ஐந்தாவது இடத்தில் இருக்கின்றது. பேரிச்சம்பழம் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுகின்றது. கணிசமான பகுதி மக்கள் விவசாயத்தை நம்பிவாழ்கின்றனர்.

# கணிதப் புதிர்

கடையொன்றில் பொருட்களை வாங்க ஒரு தொகுதி மக்கள் கியூவில் நின்றனர். அந்தக் கியூவில் மூன்று நண்பர்களும் இருந்தனர். ராஜா முதலாவது ஆளாக நின்றான். ரஞ்சன் கடைசி ஆளாக நின்றான். 11 ஆவது நபராக இருந்தவன் ரவி.

கடைக்காரர் எல்லோரையும் திரும்பி நிற்குமாறு கூறிவிட்டு - பின் வரிசையில் இருந்து பொருட்களை வழங்க ஆரம்பித்தார். இதனால் முதலாவதாக ரஞ்சனுக்குப் பொருட்கள் கிடைத்தன. ராஜாவுக்குக் கடைசியாகத்தான் பொருட்களை வாங்க முடிந்தது.

ஆனால், ரவிக்கு மட்டும் நின்ற ஒழுங்கின்படியே - 11 ஆவது ஆளாகப் பொருட்கள் கிடைத்தன. அப்படியானால் அந்தக் கியூவில் எத்தனைபேர் நின்றிருப்பார்கள்?

விடை - 21 பேர்

## வார்த்தை விளையாட்டு - 22

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 அ | | 2 | | ■ | 3 |
| | 4 | | | | ரி |
| | | 6 தி | | | |
| ■ | 7 ச | | | | ■ |
| 8 | | | ■ | 9 | |
| | ■ | ■ | 10 | ண் | |

**இடமிருந்து வலம்**

1. மன்னன்
4. ஒரு மரக்கறிச் செடி
6. கள்வன்
7. நித்திரை
9. முகத்தில் வாய்க்குக் கீழே இருப்பது
10. நீரிலும், நிலத்திலும் இது வாழும்.

**மேலிருந்து கீழ்**

1. குளத்தில் மலரும் ஒரு பூ
2. உண்மை
3. குதிரை
4. ஊதாரியின் எதிர்ப்பதம்
8. இராமனால் மறைந்திருந்து கொல்லப்பட்டவன்.
9. வில்லின் ஒரு பாகம்

முழுப் பெயர் : ..............................

கற்கும் பாடசாலை : ..............................

கற்கும் தரம் : ..............................

முகவரி : ..............................

..............................


கையொப்பம் திகதி

சிறுவர் அரங்கம் வார்த்தை விளையாட்டுப் போட்டியில் 15 வயதுக்குட்பட்ட எவரும் பங்குபற்றலாம்.

மேறகாணும் கூப்பனை நிரப்பி உங்கள் சுயவிபரங்களுடன் தபாலில,

**நமது ஈழநாடு**
**சிறுவர் அரங்கம்**
267, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் பதில்கள் எமக்கு வந்து சேர வேண்டிய
இறுதி நாள்:- 05-03-2003
சரியான விடை எழுதிய மூவர் குலுக்கல் மூலம்
தெரிவுசெய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும்.



## வார்த்தை விளையாட்டு - 21

இல் பங்குபற்றி சரியான விடை எழுதி, குலுக்கல் மூலம் பரிசு பெறத் தெரிவு செய்யப்பட்ட அதிர்ஷ்டசாலிகள்.

*1ஆம் பரிசு* -
**ஈஸ்வரன் துவாரகன்**
நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

*2ஆம் பரிசு* -
**சிவகுமார் விஷாளன்**
இல.201, 5 ஆம் ஒழுங்கை,
பண்டாரிக்குளம்,
வவுனியா.

*3ஆம் பரிசு* -
**சோதிலிங்கம் பிரசாந்தி**
கிளுவானை லேன்,
கோப்பாய்.

★ *பரிசுகள் தபால்மூலம் விரைவில் உங்களை வந்தடையும்.*

## வார்த்தை விளையாட்டு-21 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**
1. அரவம்
4. கனவு
5. தடயம்
6. விம்பம்
8. கொழும்பு
10. மதி

**மேலிருந்து கீழ்**
1. அன்னம்
2. வருடம்
3. சாவு
5. தவிடு
6. விடுதி
7. பழுது
9. புண்



## இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- செ.செல்வராஜா
கற்கும் பாடசாலை :-
யா/சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி.
கற்கும் தரம :- 7
ஆர்வமுள்ள துறைகள :-
சங்கீதம், கல்வித்துறை, சித்திரம், விளையாட்டு.

முழுப்பெயர் :- சி.கஜமுகன்
கற்கும் பாடசாலை :-
யா/ மத்திய கல்லூரி
கற்கும் தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
விஞ்ஞானம், கணிதம், பத்திரிகை வாசித்தல்





முழுப்பெயர்:-க.சுபராம்
கற்கும் பாடசாலை :-
யா/இந்து ஆரம்பப்பாடசாலை
கற்கும் தரம :- 4
ஆர்வமுள்ள துறைகள :-
கதைவாசித்தல், சித்திரம் வரைதல்

முழுப்பெயர்:- த.கஜனி
கற்கும் பாடசாலை :-
யா/சரவணை நாகேஸ்வரி மகாவித்தியாலயம்
கற்கும் தரம :- 9
ஆர்வமுள்ள துறைகள :-
கல்விசார் செயற்பாடுகள், பத்திரிகை வாசித்தல்

முழுப்பெயர்:-வா.சஞ்ஜீவன்
கற்கும் பாடசாலை :-
கிளி/மகாவித்தியாலயம்
கற்கும் தரம :- 7
ஆர்வமுள்ள துறைகள :-
விளையாட்டு, கிரிக்கெட், வானொலி கேட்டல்.

முழுப்பெயர்:-
சி.திருமகள்
கற்கும் பாடசாலை :-
யா/இந்து ஆரம்பப்பாடசாலை
கற்கும் தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைவாசித்தல், வானொலிகேட்டல், சித்திரம்வரைதல்.

முழுப்பெயர்:-
இ.சிறிகிருஸ்யந்தி
கற்கும் பாடசாலை :-
யா/சாவகச்சேரி இந்துக்கல்லூரி.
கற்கும் தரம் :-10
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல்,
சிறுகதை எழுதுதல், வானொலி கேட்டல்.

முழுப்பெயர்:-
சி.சிவநேசன்
கற்கும் பாடசாலை :-
யா/ஹாட்லிக்கல்லூரி
கற்கும் தரம் :-10
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், வானொலி கேட்டல்.

# சிறுத்தை: சில தகவல்கள்

சிங்கங்களையும், புலிகளையும்விட அளவில் சிறியதான சிறுத்தைகள் சுமார் நூற்றுஅறுபதில் இருந்து நூற்றியென்பது செ.மீ வரை வளரும்.

சிறுத்தைகளின் உடலில் அழகு சேர்ப்பதே கரும்புள்ளிகள்தான். அவை அமைந்துள்ள விதத்தை ரொஸெட்ஸ் என்பர்.

சிறுத்தைகளில் லெப்பர்ட், ஸ்நோ லெப்பர்ட் மற்றும் சீட்டா என்ற மூன்று வகைகள் உள்ளன. இவற்றுக்கிடையே வித்தியாசம் இருப்பது உடலளவில் மட்டுமே.

சிறுத்தைகள் பெரும்பாலும் காடுகளில்தான் வசிக்கும். ஆபிரிக்கக் காடுகளிலும், தெற்காசியக் காடுகளிலும், தென்கிழக்காசியக் காடுகளிலும், ரஷ்யப் பனிமலைகளிலும் இவை பரவலாகவுள்ளன.



பெரும்பாலும் சூரியன் மறைவதற்கு ஓரிரு மணிநேரம் இருக்கும்போதுதான் வேட்டைக்குச் செல்லும். பாதி இரவுவரை வேட்டையாடிவிட்டு மீண்டும் அதிகாலையில் வேட்டைக்குச் செல்லும். குளிர்காலத்தில் மட்டும்தான் பகல் வேளைகளில் வேட்டைக்குச் செல்லும்.

சிறுத்தைகள் தைரியமானவை. மனிதர்களை நேருககு நேர் பார்க்க நேர்ந்தாலும், சிலசமயம் துப்பாக்கிச் சத்தத்துக்கும்கூட இவை ஓடி ஒளிவதில்லை. அதேபோல தங்கள்மேல் காயம் பட்டுவிட்டால் வேட்டைக்காரர்களை திருப்பித்தாக்கவும் சிறுத்தைகள் தயங்குவதில்லை.

சிறுத்தைகள் நீரில் நன்றாக நீந்தக் கூடியவை. ஆனாலும் நதிகளைக் கடக்கும்போது நீரில் இறங்காமல் ஏதேனும் மரக கடடைகள், பாலங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி கடக்கவே நினைக்கும்.

இவை ஏதேனும் இரையைப் பார்த்தால் கிட்டத்தட்ட ஆறுமீற்றர்கள் ஒரே தாண்டலில் தாண்டிப் பிடிக்கும் திறன்வாய்ந்தவை.

இரை எவ்வளவு வேகமாகத் தப்பித்து ஓடினாலும் ஐம்பதுமீற்றர் தொலைவுக்குள் அதைப் பிடித்துவிடும்.

அதிகமான மிருகங்கள் உலவிக் கொண்டிருக்கும் இடத்துக்குச் சென்றாலும், ஒரு மிருகத்தை மட்டுமே குறி வைத்து வேட்டையாடும். மற்றமிருகங்களைப் பயமுறுத்தக்கூட செய்யாது!

சிறுத்தையைப் பொறுத்தவரை அவற்றின் கேட்கும்திறனும், பார்க்கும் திறனும் மிக அதிகமென்றாலும் மோப்பசக்தி மிக மிகக் குறைவு.

ஓர் இளம்குதிரையை ஐம்பதுமீற்றர்வரை தூக்கிச்செல்லவும், கனமான மலையாட்டைத் தூக்கிக்கொண்டு மூன்றுமீற்றர் உயரம் குதிக்கவும் சிறுத்தைகளால் முடியும்.

ஒரு பிரசவத்தில் ஒன்றிலிருந்து நான்கு (சில சமயம் ஆறு) சிறுத்தைக் குட்டிகள் பிறக்கும். பிறந்த குட்டிகள் ஐந்நூறு கிராம் எடையும், பதினைந்து செ.மீ நீளமும் கொண்டவையாக இருக்கும்.

சிறுத்தைக்குட்டிகளின் சத்தம் பூனைகளின் 'மியாவ்' போலவே இருக்கும்!

ஐந்தாறு மாதங்களுக்கு தாய்ப்பால் மட்டுமே குடிக்கும் குட்டிகள், மாமிசம் உண்ணத் தெரிந்தஉடனேயே தாயால் வேட்டைக்கு அழைத்துச் செல்லப்படுகின்றன. இரண்டுவயதுவரை தாயுடன் இருக்கும்.

சிறுத்தைகள் தாங்கள் உண்டு எஞ்சிய உணவை மரப்பொந்துகளில் ஒளித்து வைக்கும் வழக்கம் உடையவை.

பெரும்பாலும் தனிமை விரும்பிகளான சிறுத்தைகள், தங்கள் குட்டிகளைத் தவிர வேறு பெரியசிறுத்தைகளோடு சேர்ந்து இருக்காது. தங்களுடைய எல்லையை மரக்கட்டைகளில் சிறுநீர்கழித்து அதன்மூலம் அறிவிக்கும். அதைத் தாண்டிவரும் சிறுத்தைகளுடன் சண்டையிடும்.

பாந்தர் என்பது கறுப்பு முடியுடன் பிறக்கும் சிறுத்தை.

சில ஆபிரிக்க மக்கள் சிறுத்தைகளை அரச விலங்காக (Royal Animal) நினைக்கிறார்கள்.

சில நூற்றாண்டுகள் முன்பு தளபதிகள் தங்கள் பட்ஜ்களிலோ, தோள்பட்டையில் அணியும் கோட்களிலோ சிறுத்தை உருவத்தைப் பொறிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர்.

காயம்பட்டாலன்றி மனிதர்களை சிறுத்தைகள் தாக்குவதில்லை.

சிறுத்தைகளின் அழகான தோலுக்காக அவை வேட்டையாடப்படுவதால் அவை அழிந்து வரும் உயிரினமாகின்றன. பல விலங்கு நல அமைப்புக்கள் சிறுத்தைகளைக் காக்க முயற்சி எடுத்து வருகின்றன.

## சார்க் நாடுகளும் தலைநகரங்களும்

| | | |
|---|---|---|
| இலங்கை | - | ஸ்ரீ ஜெயவர்த்தனபுர |
| இந்தியா | - | புதுடெல்கி |
| பாகிஸ்தான் | - | இஸ்லாமாபாத் |
| பங்களாதேஷ் | - | டாக்கா |
| நேபாளம் | - | காட்மண்டு |
| பூட்டான் | - | திம்பு |
| மாலைதீவு | - | மாலே |

- சீவரட்ணம் மேரிஜீவனா

## விடுகதைகளும் விடைகளும்

1. ஒரு சட்டிக்குள் மூன்று குடம் தண்ணீர் அது என்ன?
2. அடிக்க அடிக்கக் கத்தும், குழை போடத் தின்னாது அது என்ன?
3. அண்ணன் தம்பி இருவர், அவர்களைச் சுற்றிப் பன்னிரெண்டு பேர் அது என்ன?
4. நாம் எங்கு சென்றாலும் எம்முடன் சேர்ந்து வருவான் அவன் யார்?
5. பழமாகிக் காயாகும், காயாகிப் பூவாகும் அது என்ன?

நவரத்தினராசா டெய்சி
தரம்:- 10
கிளி/பளை மத்திய கல்லூரி

விடை
1. நுங்கு 2. மேளம்
3. மணிக்கூடு 4. நிழல் 5. தேங்காய்

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?

அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.

நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.


கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும்.


விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## உங்கள் கைவண்ணம்




லோ.ராஜீவ்
தரம் - 10
யா/வைத்தீஸ்வராக் கல்லூரி.



செ.அபிநயா
மானிப்பாய்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :..........................................
கற்கும் பாடசாலை :..........................................
கற்கும் தரம் :..........................................
வீட்டு முகவரி :..........................................
பிறந்த திகதி :..........................................
ஆர்வமுள்ள துறைகள் :..........................................
..........................................

.................. திகதி .................. ஒப்பம்

.................. அதிபர்/ஆசிரியர் ஒப்பம் .................. பெற்றோர் ஒப்பம்

# சிவராத்திரி சிறப்புமலர்

# திருமாலுக்கும் பிரம்மாவுக்கும் சிவலிங்க வடிவில் சிவபெருமான் காட்சிதந்த இரவே சிவராத்திரி!


சிவராத்திரி என்பது சிவபெருமானுக்குரிய ஷஷஇராத்திரி" என்று சொல்லப்படும். சிவ பெருமான் விருப்பு வெறுப்பு இல்லாதவர், ஞானமே திருமேனியாக உள்ளவர். சிவனை நோக்கி உலக இன்பங்களாகிய போக போக்கியங் களை விரும்பி, சிலர் காமிய தவம் மேற்கொள்கிறார்கள். அத்தகைய வர்களுக்கு சிவபெருமான் நீண்டவாழ்நாள், நோயற்ற வாழ்க்கை, அளவற்ற செல்வம், மாடமாளிகை போன்றவற்றைத் தந்து நல்ல வாழ்க்கை அமையும்படி செய்கிறார்.

தேவலோக இன்பங்களை விரும்பி தவம் செய்பவர்களுக்கு இந்திர உலகம், சொர்க்க உலகம், வைகுண்ட உலகம் முதலிய உயர்ந்த உலகங்களிலே ஷஷஎண்டிசைக் கனகமும், பைம்பொன் மாளிகையும், கற்பகப் பொழிலும்" அனுபவிக்கும்படி சிவ பிரான் அருள்புரிகிறார்.

***திருமாலும் பிரம்மாவும்:-***

உயிர்களின் அறிவிலே கலந்திருக்கும் ஆணவமல சக்தி வலிமை குன்றும் வகை யில் படைத்தல் முதலிய சக்தியையும் அந்த அயன், மால், ருத்திரன் ஆகியவர் களிடம் பதித்தருள்கிறார். அந்த சக்திகளே அவ்விதம் படைத்தல் முதலிய செயல் களைச் செய்கிறார்கள். இதை அயன், மால் முதலியவர்கள் அறிந்துகொள்ளாமல் - அந்தப் படைத்தல், காத்தல் முதலிய செயல்களுக்குத் தாஙு களே! பரம காரணர் என்று தவறாக நினைத்துக் கர்வம் கொண்டதாகவும் ஒரு நிகழ்ச்சி சொல்லப்படு கிறது.

ஒரு சமயம் திருமாலும், பிரம்மாவும் தங்க ளுக்குள் யார்? பெரியவர் என்று பூசலிட்டுக் கொண்டார்கள். அவர்களுக்குள் ஏற்பட்ட இந் தப் பூசல் காரணமாக உலக உயிர்கள் துன்பமடைந்தன. இவ்விதம் நேர்ந்த உலக உயிர்களின் துன்பத்தை நீக்கும் பொருட்டு சிவபெருமான் அந்த இருவருக்கும் இடையில் ஒரு ஜோதி வடிவமாகத் தோன்றினார். இந்த ஜோதியின் அடியையும், முடியையும் எவர் காண்கி



திருவண்ணாமலை
ஜோதி அனற்பிழம்பாகிய மலை

றாரோ! அவரே பெரியவர் என்று கூறினார்.

பிரம்மாவும், திருமாலும் முறையே அன்ன மாகவும், வராகமாகவும் உருவம் கொண்டு அந்த ஜோதியின் அடிமுடியைக் காண முயன் றார்கள். அது இயலாமல் போகவே அகந்தை யிலிருந்து விடுபட்டு அந்த ஜோதியை வணங்கி நின்றார்கள். அப் பொழுது அவர்களுக்குச் சிவபெருமான் காட்சி தந்து அருள்புரிந்து அந்த ஜோதியில் மறைந்து சிவலிங்கமாகக் காட்சி தந்தார்.

அந்த ஜோதி அனற் பிழம்பாகிய மலை வடிவமாக ஆயிற்று. அதுவே திருவண்ணா மலை ஆகும். இவ்விதம் பிரம்மாவுக்கும், திருமாலுக்கும் இறைவன் சிவலிங்க வடிவத் தில் காட்சி தந்த இரவே சிவராத்திரி ஆகும். அந்த ராத்திரியில் தேவர்களும், முனிவர் களும் சிவபெருமானைப் பூஜித்து பெரும் பேறு பெற்றார்கள்.

அயனும், மாலும் சிவபெருமானின் அடி முடி தேடிச் சென்ற வரலாறு பலரும் அறிந் ததுதான். ஆனால், அவர்களுக்கு இறைவன் சிவலிங்க வடிவத்தில் காட்சி கொடுத்தது சிவராத்திரியில் என்பது சைவ சித்தாந்திகள் எழுதிய நூல்களிலிருந்தே நாம் அறிந்து வருகின்றோம்.

*இரவு பகல்:-*

இனி 'பகல்' என்பது கருவிகரணங்க ளோடு சேர்ந்து அறிவு தொழிற்படும் காலமாகும். 'இரவு' என்பது கருவிகரணங் கள் ஒடுங்கிக் கிடக்கும் நிலையாகும். 'படைப்பு' என்பது கருவிகரணங்களோடு உயிர்கள் கூடிநிற்கும் நிலையாகும். 'சங்கா ரம்' என்பது கருவி கரணங்களிலிருந்து உயிர்கள் நீங்கி நிற்கும் நிலையாகும். இதனால் படைப்பு 'பகல்' ஆகும். சங்காரம் 'இரவு' ஆகும்.

உயிர்கள் கருவிகரணங்களுடன் கூடாத ஒடுக்க நிலையிலிருந்து (தோற்றம்) படைப் புக்கு வருவதற்கு முன்பு அந்த நள்ளிரவில் உமாதேவியார் எல்லா உயிர்களும் சிவபி ரான் அருளால் பந்தபாசப் பிணைப்புகள் (வினையின் வேகமும், மலத்தின் வலி மையும், மாயையின் மயக்கமும் முறையே) குறைந்து சிவபுண்ணியமும் சிவானந்த முக்தியும் உயிர்களுக்குச் சித்திக்கவேண்டி சிவபூஜை செய்தார். அவ்விதம் உமாதே வியார் சிவபெருமானை பூஜித்த ஷஇரவு' சிவராத்திரி என்றும் போற்றப்படுகிறது.

இளங்குழந்தைகளுக்குக் கடும்நோய் வந்தபோது அந்த நோய்க்குரிய வன் மையான மருந்தை அக்குழந்தைகள் அருந்தமாட்டா, அப்போது அதன் தாய் மருந்துண்டு பத்தியம் காத்து தன்பாலை அந்தக் குழந்தைக்குப் புகட்டுகிறாள். அதனால் அந்தக் குழந்தைகளின் நோய் நீங்குவதை உலக வழக்கில் நாம் பார்க்கிறோம். அதுபோலவேதான் உயிர்கள் துன்பம் நீங்கி, இன்பம் பெறும் பொருட்டு, உமாதேவியார் சிவராத்திரியில் சிவனைப்



ஜோதியாய்த் தோன்றியன்

பூஜித்தார்.

பஞ்சாட்சர ஜபம், சிவாலய தரிசனம், சிவலிங்க பூஜை ஆகியவற்றை எல்லா நாட் களுமே செய்யலாம். செய்ய வேண்டும், என் றாலும் மற்ற நாட்களில் செய்வதைவிட சிவராத்திரி தினத்தில் அவற்றைச் செய்வது கோடி பங்கு சிறந்த பலனைத்தரும்.

மாசி மாதம் கிருஷ்ண பட்சம் இரவு பதி னான்கு நாழிகைக்கு மேல் பதினாறு நாழி கைக்குட்பட்ட காலத்தில் சதுர்த்தசி யோடு கூடிய காலமே சிவராத்திரி புண்ணிய காலமாகும். அன்றையதினம் இரவில் நான்கு காலமும் விசேட பூஜைசெய்து சிவனை வழிபடவேண்டும். இவ்விதம் செய்பவர்கள் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங் களிலிருந்தும் விடுபட்டு இம்மையில் நல் வாழ்க்கை பெறுவதோடு முடிவில் சிவபெரு மானின் திருவருளுக்கு உரியவர்களாவார் கள். ★

**காரை அருளானந்தன்**

**சீமாட்டி புடைவைக் கடல்**
122, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 021-2222196

**J.லக்ஷனன் (பத்திரிகை முகவர்)**
7 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

**பவானி விலாஸ்**
கச்சான் அல்வா தொழிலகம்
32/1, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
T.P 2223138

**சிவன் ஸ்ரோஸ்**
உரிமையாளர் - S.பரமநாதன்
பரமேஸ்வராச் சந்தி,
(கம்பஸ் அருகாமை)
திருநெல்வேலி.

**ரவி அன் ராஜ் சில்க்ஸ்**
618 A, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.
(கோயிலுக்கு முன்பாக)
T.P 2222469

**எரிக்கணேஸ்**
மூக்குக்கண்ணாடி அகமும்
பல்கட்டும் இடமும்
564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P 2222486

**சாருணி ஜுவல் & கட்டிங் வேக்ஸ்**
74, கன்னாதிட்டி,
யாழ்ப்பாணம்.
T.P 2223502

**SDS கணினிகள் சேவை**
178 (114), அரசடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

**ஆர்.வி.ஜி பீடி ஸ்தாபனம்**
58, நல்லூர் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.
T.P 0777-727478
**ஆர்.வி.ஜி மருந்தகம்**
504, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P 2222129

# சிவராத்திரி சிறப்புமலர்

# சிவராத்திரி மகிமை

சைவசமயத்தவர்களின் முழுமுதற் தெய்வமான சிவனை நினைந்து உலகம் முழுவதும் வாழும் சைவசமயத்தவர்கள் புனிதமாக வழிபாடுசெய்யும் உன்னத நாட்களில் சிவராத்திரி மகத்துவமானது. வடநாட்டுச் சைவர், காசியில் கூடி, லிங்கோற்பவ கால வழிபாடுசெய்து கங்கையில் நீராடி விரதம் நிறைவுசெய்வர். தென்நாட்டிலும் சைவர்கள் பெருங்கோயில்கள் தோறும் வழிபாடு செய்து விழித்திருந்து இறை வழிபாடு செய்வர். ஈழத்திலும் பஞ்ச ஈஸ்வர தலங்கள் முதல் ஏனைய தலங்களிலும் காலம் காலமாகச் சிவராத்திரி விழா பக்தி பூர்வமாக அநுஷ்டிக்கப்பட்டு வந்துள்ளது.

*"அரியும் யானுமுன் தேடுமவ்வனற்கிரி யலை*
*கிரியெனும்படி நின்றதால் அவ்வொளி கிளர்ந்த*
*இரவதே சிவ ராத்திரி யாயின திறைவற்*
*பரவி யுய்ந்தனர் அன்னதோர் வைகலிற் பலரும்"*

**சோ.பரமசாமி B.Sc.**
**இணுவில்**

### சிவராத்திரி வரலாறு

தன்னைவிடப் பெரியோன் எவருமில்லையென நெஞ்சம் செருக்குற்றிருந்த தக்கன், தனக்கு நேர்ந்த கதிக்கு விமோசனம் தேடித் தந்தையாகிய பிரமதேவனிடம் சென்றான். ஆணவத்தால் மானிடத் தலை நீக்கப்பட்டு ஆட்டுத் தலையைத் தக்கன் சுமக்க நேர்ந்தது என்பதை உணர்ந்த பிரமா, அன்றொரு நாள் அயனும் மாலும் தமக்கு நடுவில் தோன்றிய சோதிப்பிழம்பின் நிகழ்வைத் தக்கனுக்கு எடுத்துச் சொன்னார். சோதிவடிவின் அடியையும் முடியையும் தேடிச்சென்ற இருவருக்கும் ஏற்பட்ட அனுபவத்தைக் கூறுவதே கந்தபுராண தட்ஷ காண்டத்தில் வரும் அடிமுடி தேடிய படலாகும்.

சிவராத்திரி விரதம் - நித்திய சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, மாதச் சிவராத்திரி, யோகசிவராத்திரி, மகா சிவராத்திரி என்று ஐவகைப்படும். ஆண்டிலுள்ள இருபத்து நான்கு சிவராத்திரிகளிலும் சிவபூசை செய்து, விரதம் காப்பது நித்திய சிவராத்திரி ஆகும். தை மாதம் கிருஷ்ணபட்சப் பிரதமை முதல் பதின்மூன்று நாட்கள் வழிபடுவது பட்ச சிவராத்திரி; மாசி மாத கிருஷ்ண பட்ச சதுர்த்தசி நள்ளிரவிலே இலிங்கோற்பவ காலம் வருமாயின், அது மகா சிவராத்திரி ஆகும். பங்குனி மாத கிருஷ்ண பட்ச முதல் திருதியை, சித்திரை மாத கிருஷ்ண அட்டகம் முதலியன மாத சிவராத்திரி என்றும் - திங்கட்கிழமை முழுவதும் அமாவாசை கூடியிருந்தால், அந்நாள் யோக சிவராத்திரி என்றும் கைக்கொள்ளப்படுகிறது.

இந்த ஐவகைச் சிவராத்திரிகளுள் மாசி மாதத்தில் வரும் சிவராத்திரியே மகா சிவராத்திரி என்று விசேட நாளாக மதித்து விரதம் அநுஷ்டிப்பது சைவ சமயிகள் வழக்கம்.

### விரதம் அநுட்டிக்கும் முறை

சிவராத்திரி தினத்தில் உபவாசம் இருத்தல் உத்தமம்; நீரேனும் பாலேனும் பருகுதல் மத்திமம்; பழம் மற்றும் தோசை முதலிய பணிகாரம் உண்பது அதமம்; என்றும் கருதப்படுகிறது.

இத்தினத்திலே இராத்திரி நான்கு யாமமும் நித்திரை விழித்திருத்தல் வேண்டும். அவ்வாறு விழித்திருக்க இயலாதவர் இலிங்கோற்பவ காலம் வரையிலேனும் விழித்திருத்தல் வேண்டும். சிவராத்திரியிற் பதினான்கு நாழிகைக்கு மேல் ஒரு முகூர்த்தம் இலிங்கோற்பவகாலம். அதாவது நள்ளிரவு பன்னிரண்டு மணிவரையுமுள்ள காலம் நீங்கும் வரையிலேனும் நித்திரை விழித்து விரதம் காத்தல் நன்று என்று கூறப்படுகிறது.

### சிவராத்திரி விரதப் பேறு

மகா சிவராத்திரி நாளன்று நான்கு யாமமும் நித்திரை விழித்து விரதம் அநுட்டிப்போர் உயர்ந்த பேறுகளைப பெறுவர் எனச் சிவராத்திரி புராணம் செப்புகிறது. உணவின்றி உயிர் காப்பதற்காக நான்கு யாமமும் விழித்திருப்போரும் சிவலோக பதவிகளைப் பெறுவர் என்ற தளராத நம்பிக்கை சைவசமயிகளுக்கு உண்டு.


உங்களின் சௌகரியமான பயணத்திற்கு

Serendib Express

AIRLINE

Jaffna Special Feel the Differences



500, Gall Road, Wellawatta, Colombo - 06
Tel : 505632 Fax : 500626

13, Power house Road, Jaffna.
T.P : 021 - 2223916
0777 - 801038

67A, Wolfendhal Street, Colombo - 13
Tel. 01-390128, Fax 074-612656
Hotline - 0777-517019

(சி/624)

✪ மொபிட்டல் மேசைத் தொலைபேசிகள் - தொலைத் தொடர்பு நிலையங்கள், வீடுகள் போன்றவற்றிற்கு ஏற்ற வகையில் பொருத்திக் கொடுக்கப்படும்.

✪ டயலொக் தொலைபேசிகளும் பொருத்தித்தரப்படும்
✪ நீங்கள் ஓடர்செய்து 24 மணி நேரத்தில் பொருத்தித்தரப்படும்.

நாடவேண்டிய முகவரி

பவர் செலூலர்

இல.183, 1 ஆம் மாடி நியூ லலிதா மாளிகை,
(வின்சர் திரைஅரங்கு முன்பாக)
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P 071-399220, 0777-242416

(சி-619)

SUNDHARSON

Importers & distributors of electrical items, P.V.C pipes & fittings etc
Central Market View, Manipay. T.P/fax 021-2222751

சுந்தர்சன்

மத்திய சந்தை முன்பாக, பிரதான வீதி, மானிப்பாய்.

உள்ளூரிலேயே மக்கள் சேவையை சிரமேற்கொண்டு
கடந்த 22 ஆண்டு காலமாக

✪ மின்சார உபகரணங்கள்
✪ அலங்காரப் பொருட்கள்
✪ P.V.C நீர்க்குழாய்கள், இணைப்புக்கள்
✪ L.G T.V., fridge, washing machine

போன்றவற்றை நிதானம், நியாயம், உத்தரவாதத்துடன்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

சி/620

நாடு நலம் பெற
உள்ளூர் உற்பத்திகளை
ஊக்குவிப்போம்

அண்ணா தொழிலகம்

இணுவில்.

T.P. No. 2223565

சி/618

ஒருதரம் வந்தால் இது ஒன்றே தரம் என்பீர்கள்

Yarl beach inn




யாழ் பீச் இன்

(Sea food Restaurant)

No 8, Old Park Road, Jaffna. Tel/Fax: 021 - 2225490

★ குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத அறைகள்
★ கார் தரிப்பிட வசதி
★ மாநாட்டு மண்டபம்
★ இணைக்கப்பட்ட குளியலறை
★ கீழைத்தேய மேலைத்தேய உணவுகள்
★ உல்லாசப் பயணிகளுக்கு, அனுபவம் வாய்ந்தோரின் சேவை

(இலங்கை உல்லாசப்பயணிகள் சபையின் அங்கீகாரம் பெற்றது)

(சி-623)
உரிமையாளர்:- சிலுவைராசா

கணினி தமிழ் மென் பொருட்கள்

இலங்கையின் முதன் முறையாகத் தமிழ்
க்ணிப்பொறிகள்

எதிர்கால கணினி யுகத்தைத் தமிழால் வெல்வோம்

✪ விளம்பரம், ஓவ்செட் துறைகளின் பயன்பாட்டிற்கோர் சிறந்த வரப்பிரசாதம்

✪ கலைநயமிகு அழகிய Cliparts வடிவங்கள்
(கறுப்பு வெள்ளை மற்றும் வர்ணங்கள்)

இவை அனைத்துமே உங்களுக்குரிய பிரயோக
குறியீட்டு முறையில் பாவிக்கும் வடிவில்
அமைக்கப்பட்டுள்ளன.

ஹரிஹரணன் பிறிண்டேர்ஸ்

424,. K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
021 - 2222717

(சி-621)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

*செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு*
*எய்த உணர்ந்து செயல்.*
*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## சலிப்பைத் தரும் உறுதிமொழிகள்!

சில தினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்த அமைச்சர் மிலிந்த மொறகொடவும், கடற்படைத் தளபதியும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் - யாழ்.குடாநாட்டு நிலவரங்களை அறிந்து சென்றதோடு, மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகளையும், யாழ்.அரசாங்க அதிபரையும் சந்தித்துக் கலந்துரையாடல்களையும் நடாத்தியிருந்தனர்.

முதலில் இந்த விஜயம் யாழ்.குடாநாட்டின் பாதுகாப்பு நிலவரங்களை மதிப்பீடு செய்வதற்கான பயணமே எனக்கூறப்பட்டபோதும் - பின்னரே இந்த விஜயத்தினதும், கலந்துரையாடலினதும் பின்னணி விடயங்கள் வெளியாகின.

இதனடிப்படையில் - வடபகுதியில் இயல்புநிலையை ஏற்படுத்துவது பற்றி ஆராய்வதற்காகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த விசேட பணிப்பின் பேரிலேயே அவர்களது வருகை இடம்பெற்றது தெரியவந்தது.

அதேவேளை - இவ்வாறானதொரு மதிப்பீட்டை மேற்கொள்வதற்கான அழுத்தம், நோர்வேத்தரப்பு, பிரதமரிடம் கேட்டுக்கொண்டதன் பேரிலேயே கிடைத்ததாகவும் மேலும் தெரியவருகின்றது.

இவற்றினடிப்படையில் - இன்னமும் இயல்பு வாழ்க்கை ஏற்படுத்தப்படவில்லை என்பதை பிரதமர் ரணில் ஒப்புக்கொள்வதாகவே இந்த விஜயத்தின் பின்னணி கூறுகின்றது.

அதேவேளை - இந்த விஜயத்தின் பின்னர் பலாலிப் படைத் தளத்தில் நடைபெற்ற மனிதநேய அமைப்புக்களுடனான சந்திப்பின்போது - யாழ்.குடாநாட்டில் உயர்பாதுகாப்பு வலயங்களுக்கு வெளியேயுள்ள 88 காவல் அரண்களை அகற்றுவதற்குத் தாம் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ தெரிவித்திருக்கிறார்.

ஆனால் - இந்த இரு விடயங்களில் வழியேயும் - அதாவது, இயல்புநிலை தோன்றவில்லை என்பதைப் பிரதமர் ஒப்புக்கொள்வதான விடயமும், காவலரண்களை அகற்றுவதான ஒஸ்ரின் பெர்ணான்டோவின் உறுதியளிப்பும் - எவ்வகையான விளைவுகளைத் தரப்போகின்றன என்பதை நம்பிக்கைக்குரியதாகக் கூறமுடியாதிருக்கிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர், வட-கிழக்கில் நடைபெறுவதாக உறுதியளிக்கப்பட்டிருந்த பல விடயங்களும் விவகாரங்களும் - இன்னமும் தீர்வினை நோக்கி நகர்த்தப்படாமலேயே, அசைவற்ற நிலையிலிருப்பது மக்கள் மத்தியில் சலிப்பையே தோற்றுவித்திருக்கிறது.

அரசாங்கத்தரப்பு பிரசாரப்படுத்தும் அல்லது உறுதிகள் வழங்குமளவுக்கு - அந்த விடயங்களுக்கு செயலாக்கம் தருவதில் பின்னடித்து வருகின்றமையை கடந்த ஒரு வருடத்திலும் தமிழ்மக்கள் அனுபவ ரீதியாகவே உணர்ந்துள்ளனர்.

இயல்பு வாழ்க்கைக்கான அடிப்படை விஷயங்களில் கூட - பிரமாதமாகச் சொல்லிக் கொள்வதற்கான தளர்வுகளைப் படைத்தரப்பு இதுவரை மேற்கொள்ளவில்லை. படைத்தரப்புக்கு உரியவாறு அழுத்தம் கொடுத்து - சுமுக வாழ்க்கையை உறுதிப்படுத்துவதிலும் அரசாங்கம், முன்னேற்றகரமான நிலைப்பாடுகளை எட்டியதாகத் தெரியவில்லை.

இவைபற்றி - பேச்சுவார்த்தை மேசைகளில் விடுதலைப் புலிகள் பல தடவைகள் வலியுறுத்தியும், சுட்டிக்காட்டியும்,

மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பொது அமைப்புக்களும், மனிதநேய நிறுவனங்களும் எடுத்துக்கூறியும்,

இயல்பு நிலையை சொல்லிக்கொண்டதுபோல் உருவாக்கம் செய்வதில் - குறிப்பிடத்தக்கதாக எதுவுமே நடைபெறவில்லை என்பதே கண்கூடு.

மக்களது மீள்குடியமர்வும், புனர்வாழ்வு - புனரமைப்பு நடவடிக்கைகளும், படையினரின் கெடுபிடிகள் நீக்கமும் - புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்னர் எவ்வாறு இருந்தனவோ, அதிலிருந்து மக்கள் நலன் நோக்கியதாக நகரவில்லை என்ற நிலையிலும்,

இதுவரை அமைச்சர்கள் பலரும், சர்வதேச நிறுவனங்களைச் சேர்ந்தோரும் யாழ்.குடாநாட்டுக்கு அடிக்கடி வந்து அனுதாபத்துடன் மக்களின் பிரச்சினைகளை கேட்டுச்செல்வதாக உறுதியளிப்புக்களை விடுத்தும் - எதுவுமே பலன்களைத் தராத போதும்,

பிரதமரின் விசேட கவனமும் ஒஸ்ரினின் அறிவிப்பும் - நடைமுறைச் சாத்தியப்படுமா என்பதை, எதிர்பார்ப்புடன் காத்திருக்கும் நிலையில் மக்களில்லை என்பதே யதார்த்தமானது.

# மனித உயிர், வாழ்விடப் பிரச்சினைகளில் இராணுவத்தரப்பு அக்கறையற்றுள்ளது!

## மக்கள் சமாதான முன்னணி அறிக்கை

சமாதானம் சம்பந்தப்பட்ட சகல விடயங்களும் சமரசப் பேச்சுவார்த்தைகள் மூலமாக ஒரு உடன்பாட்டுக்கு கொண்டு வரவேண்டும் என்பதை இலங்கையிலுள்ள 140 அமைப்புக்களை அங்கத்துவமாகக் கொண்ட மக்கள் சமாதான முன்னணி வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பான மக்கள் சமாதான முன்னணி விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, வடக்கில் காணப்படும் உயர்பாதுகாப்பு வலயங்கள் பற்றி இலங்கை அரச படையினரும் தமிழீழ விடுதலைப்புலிகளும் கொண்டுள்ள இழுபறி நிலைமைகளை வெளிச்சத்துக்கு கொண்டு வரவேண்டும். இராணுவத்தினரின் நிலைப்பாடு நடைமுறைக்கு ஒவ்வாதனவாகப் புலப்படுகின்றன. இவ்விரு சாராருக்கிடையிலான நிலைப்பாடுகளின் விளைவாக சமாதானத்தில் நம்பிக்கையையும் நல்ல முடிவையும் எதிர்பார்க்கும் நம்முள் சந்தேகங்களைத் தோற்றுவிக்கின்றன.

எந்தவொரு சமாதானத்திலும் பாதுகாப்பு மிக முக்கிய அங்கம் வகிக்கின்றது. விசேடமாகத் தன்னிலைப்படுத்தும் இராணுவ உறுதிப்பாடு பற்றிய சிக்கல்களை நீக்கும் நிலையில் சமாதானம், மனித உரிமைகள், மக்கள் அபிலாஷைகள் என்பவற்றுக்குப் பிரதான இடம் அளிக்கப்படுவதில்லை என்பது வெளிப்படை. யுத்தநிறுத்தத்தில் இராணுவம் மேலெழுந்தவாரியாக நடந்துகொள்வதையும், அவர்களின் நிலைப்பாடுகளில் உறுதியாகவுள்ள நிலையையும் காணக்கூடியதாக உள்ளது.

மனித உயிர்கள் மற்றும் மக்களின் இருப்பிடங்கள் தொடர்பான விடயங்களில் படையினர் காட்டும் அக்கறையின்மை புலனாகின்றது. மக்களின் அபிலாஷைகள் யாவும் மீள்குடியேற்றம், புனருத்தாரணம், நிலையான சமாதானம் என்பதனை உணர்ந்துகொள்ளாமை துல்லியமாகின்றது.

உயர்பாதுகாப்பு வலயங்கள் பற்றி இருசாராரும் கொண்டுள்ள உடன்பாடின்மை, அவ் வலயங்கள் மக்கள் வாழும் இடங்களை அண்டியிருப்பின் அது அவர்களின் அமைதியான வாழ்வுக்கு பங்கமாகவே அமையும். பலாலி, குருநகர், காரைநகர் போன்ற இடங்களில் பேணப்படும் இராணுவ நலன்கள், விவசாய நிலங்கள், இருப்பிடங்களை இழந்த மக்களின் நலன்களில் எவ்வித அக்கறையும் காட்டுவதாகத் தெரியவில்லை.

முரண்பட்ட இந்நிலையில் மக்களும், இராணுவமும் அருகருகே வாழமுடியுமா? சமாதான வாழ்வின் பாதையில் மக்கள் இழந்தவற்றையும், பட்ட துன்பங்களையும் வீழ்ச்சிகளையும் எவராலும் மறக்க முடியுமா? இந்நிலையில் இராணுவத்தினர் மக்களின் முடிவான செயல்களுக்கும் சமாதானத்தையும், வளமான வாழ்வையும் வழங்குவார்களா?

இலங்கை அரச படையினர் அகற்றப்படுவதற்கு, புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும் என விதித்த நிபந்தனை பொருத்தமற்ற ஒரு கேள்வியாகும்.

சமாதான உடன்படிக்கையின்படி, அரச படையின் உயர் பாதுகாப்பு வலயத்தில் இருந்து அகற்றப்பட்டு அப்பிரதேசம் மக்கள் பாவனைக்கு விடப்படவேண்டும் என்பதாகும். மக்களும் அரச படையினரும் அண்மையில் வாழ்வது என்பது அசௌகரியமானதாகும் என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## மணல் அள்ளுவதற்கு புதிய நடைமுறை இன்று முதல் அமுலுக்கு வருகிறது!

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கிலுள்ள மணற்காடு குடத்தனைப் பகுதியிலிருந்து மறு அறிவித்தல் வரை மண் விநியோகம் நடைபெறமாட்டாது என வடமராட்சி கிழக்கு சுற்றுச் சூழல் பாதுகாப்பு சங்கத்தின் தலைவர் எம்.அழகராசா அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மணல் பெறுவது சம்மந்தமாக புதிய நடைமுறை இன்று தொடக்கம் அமுலுக்கு கொண்டு வரப்படவுள்ளதாகவும், மணல் அள்ளுவதற்கான விண்ணப்பப்படிவங்களை இன்று தொடக்கம் அவ்வப் பிரதேசச் செயலகங்களில் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (17)

## 18 வருடங்களின் பின்னர் வில்பத்து சரணாலயம் திறப்பு!

வில்பத்து சரணாலயம் எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் பொதுமக்கள் செல்வதற்குத் திறந்துவிடப்பட்டுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

கடந்த கால யுத்தசூழ்நிலைகளால் வில்பத்து சரணாலயப் பகுதியை அரசாங்கம் தடைசெய்திருந்தது. யானைகள், மான்கள், உள்ளிட்ட பல விலங்குகள் வாழும் வில்பத்து சரணாலயம் இலங்கையின் முக்கிய சரணாலயமாகும்.

அண்மைக் காலத்தில் வில்பத்து சரணாலயப் பகுதியில் வேட்டையாடுவோரின் தொல்லை அதிகமாக இருப்பதாகவும் தெரிய வருகின்றது.

18 வருடங்களின் பின்னர் வில்பத்து சரணாலயம் பொது மக்கள் சென்றுவருவதற்கு அனுமதிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.



**வவுனியா நிலைமைகளை ஆராய நேற்றுமுன்தினம் சென்ற கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் ஜெனரல் ரெலெவ்சன், விடுதலைப் புலிகளின் வவுனியா அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் மற்றும் கதிரவன் ஆகியோர் ஏனைய அதிகாரிகளுடன் படத்தில் காணப்படுகின்றனர்.**

# கிளிநொச்சி சிறான் கூட்டத்தில் 84 கருத்திட்டங்கள் முன்வைப்பு

(கிளிநொச்சி)

வட- கிழக்கிற்கான உடனடி மனிதாபிமான மற்றும், புனர்வாழ்வுச் செயலகத்திற்கு பதினான்கு துறைவாரியாக- எண்பத்தி நான்கு கருத்திட்டங்கள் நேற்றுமுன்தினம் நடந்த கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன.

மேற்படி கருத்திட்டங்களில், துறைவாரியாக விவசாயத் துறையில் பத்தொன்பது கருத்திட்டங்களும், சிறுவர் பாதுகாப்பு தொடர்பாக ஆறு கருத்திட்டங்களும், ஆற்றல் மேம்பாட்டிற்கு நான்கு கருத்திட்டங்களும், நீர்ப்பாசனத்துறைக்கு ஒன்பதும், கால்நடை வளர்ப்புத் தொடர்பில் இரண்டும், சுகாதாரத் துறைக்கு பதினைந்தும், வீதிப் புனரமைப்புக்கு பதினொன்றும், புனர்வாழ்வுக்கு இரண்டும், இளைஞர்களுக்கும் யுவதிகளுக்குமான தொழிற்பயிற்சிக்கு ஐந்தும், மீள்குடியமர்வு தொடர்பில் மூன்றும், கல்வி தொடர்பாக ஒருகருத்திட்டமும், மீன்பிடித் துறைக்கு ஐந்தும், கண்ணிவெடி அகற்றுதலுக்கும், வீடமைப்பிற்கும் தலாஒருகருத் திட்டங்களாக வட-கிழக்குப் பகுதியிலுள்ள எட்டு மாவட்டத்திலும் மொத்தம் எண்பத்தினான்கு கருத்திட்டங்களுக்கென 8 ஆயிரம் மில்லியன் ரூபா செலவு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

(லி)

## கல்வி வலயங்களுக்கு இடையிலான உதைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

இலங்கை பாடசாலை உதைபந்தாட்டச் சங்கமும் இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும் இணைந்து யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள ஐந்து கல்வி வலயங்களுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்தவுள்ளன.

13 வயது, 15 வயது, 17 வயது, 19 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நடத்தப்படவிருப்பதாகவும், இதில் பங்குபெற விரும்பும் உதைபந்தாட்டச் சங்கத்தினரை அந்தந்த வலய உதைபந்தாட்டச் சங்கத்தினரைத் தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

15 வயதுக்குட்பட்டோருக்கான போட்டிகள் முதலில் நடத்தப்படவிருப்பதால் - இதில் பங்குகொள்ள விரும்பும் பாடசாலைகள், எதிர்வரும் 7 ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை உதைபந்தாட்டச் சங்கத்திடம் தமது விபரங்களை ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளன.

(119)

## சிறான் கணக்காய்வுக்கு மூன்று சர்வதேச நிறுவனங்கள்

(கிளிநொச்சி)

சிறான் நிதிச் செலவுகளை கணக்காய்வு செய்ய மூன்று சர்வதேசத்தர கணக்காய்வு நிறுவனங்கள் நியமிக்கப்பட்டுள்ளன.


சிறான் அமைப்பிற்கு, சர்வதேச சமூகம வழங்கும் நிதிகள் உரிய முறையில் பயன்படுத்தப்படுகின்றதா, பக்கச்சார்பின்றி பகிரப்படுகிறதா, கணக்கியல் முறைகளுக்கேற்ப செலவு செய்யப்படுகின்றதா என்பதனை இந்நிறுவனங்கள். ஆராய்வு செய்யும்.

ஏர்னஸ்ற் அன்ட் யங் கணக்காய்வு நிறுவனம், பிரைஸ் வோட்டர் ஹவுஸ்கூப்பர் கணக்காய்வு நிறுவனம், கே.பி.எம்.ஜி .'.போட் - றோட்ஸ் - தோர்ரைன் கணக்காய்வு நிறுவனம் ஆகியனவே மேற்படி சிறான் கணகாய்வுகளை மேற்கொள்ள நியமிக்கப்பட்டுள்ள நிறுவனங்களாகும். (லி)

# வலுவற்ற அரசியலை மீளவும் நிறுவியுள்ள


# கோலாலம்பூர் அணிசேரா மாநாடு

கோலாலம்பூரில் கோலாகலமான பூர்வாங்க மாநாடு ஒன்று நடந்து முடிந்தது. அணிசேரா அமைப்பின் அங்கத்துவ நாடுகளின் நூற்றுக்கு மேற்பட்ட தலைவர்கள் ஒன்றுகூடித் தமது தேசங்களின் மீதான கொள்கைப் பரிமாணங்களையும், எதிர்ப்புக் கோஷங்களையும் வெளிப்படுத்தினர். வறுமை ஒழிப்புக்கான பிரகடனம் இவ்வணிசேரா மாநாட்டில் முதன்மை பெற்றாலும், ஆக்கிரமிப்புக்கு எதிரான கொள்கைக்குப் பலத்த ஆதரவும், வெளிப்பாடும் காணப்பட்டது. உலகமயப்படுத்தல் கொள்கையின் குறைபாட்டைச் சுட்டும் உரையாடல்கள் மாநாட்டில் ஒலித்ததுடன், அதனால் பின்தங்கிய நாடுகள் எதிர்நோக்கும் பிரச்சினையும் பரிசீலிக்கப்பட்டது. இவ்வாரம் அணிசேராமையின் சமகாலப் போக்கை அதன் யதார்த்த நிலையிலிருந்து அணுக முயற்சிப்போம்.


வாஜ்பாய்

அணிசேராமை இயக்கம் 1960களில் தொடங்கப்பட்ட ஓரமைப்பாகும். ஆரம்பத்தில் மிகச் சில வறிய நாடுகள் அங்கத்துவம் பெற்றாலும் காலப்போக்கில் பின்தங்கிய நாடுகளில் அநேகமானவை இவ்வமைப்பில் இணைந்து கொண்டன. இவ்வமைப்பின் உருவாக்கத்தின் பின்னணியில் இந்தியா, இலங்கை, முன்னாள் யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளின் தலைவர்கள் விளங்கினர். இவர்களில் சுதந்திர இந்தியாவின் பிரதமர் ஜவர்ஹர்லால் நேரு முக்கியமானவராக அமைந்திருந்தார். அவரே இக்கொள்கையின் தந்தையாகப் பேசப்பட்டாலும், இந்தியர்களே அணிசேராமை இயக்கத்தின் முன்னோடிகள் எனக் கூறுதல் பொருத்தப்பாடுடையதாகும். ஏனெனில், அணிசேராமை என்பது சுதந்திர இந்தியாவின் ஆரம்பகாலப் பாதுகாப்பு அமைச்சராகப் பணியாற்றிய கிஷ்ணமேனன் என்பவரின் எண்ணத்தில் உதித்த அம்சமாகும். அவர் இந்தியாவின் மாநிலங்களுக்கிடையிலான கொள்கைகளை எப்படிக் கையாளலாமென மத்திய அரசுக்கு முன்வைத்த கொள்கையே அணிசேராமை என்பதாகும். அதாவது, மாநிலங்கள் ஒவ்வொன்றும் ஏனைய மாநிலங்களோடு எத்தகைய உறவையும் வைத்துக் கொளளாது - அல்லது முரண்பாடுடையதாகக் கையாளுவதையே கருத்தில்கொண்டு அணிசேராது மாநிலங்களைக் கையாளுவதெனத் தீர்மானித்து அதனை மத்திய அரசுக்குச் சமர்ப்பித்தார். அவ்வாறான சூழல் ஏற்படும்போது மட்டுமே மத்திய அரசு சுமுகமாகவும், இயல்பாகவும் ஆட்சியை கையாளலாமெனக் கிருஷ்ணமேனன் கருதினார்.

கிருஷ்ணமேனனின் கருத்தியலை உலகமயப்படுத்திய நேரு அதற்குப் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தினார். அணிசேராமை என்பது உலகில் காணப்பட்ட இரு அணி அரசியலிலிருந்து விலகியிருத்தல் எனக்கருத்துருவாக்கம் செய்யப்பட்டு அமுல்படுத்தப்பட்டது. அதாவது, அணிசேராமை என்ற அமைப்பு உருவாக்கப்பட்ட காலப்பகுதியில் அல்லது அதற்கு சற்று முன்னர் நிகழ்ந்த இரண்டாவது உலக யுத்தம் - இருதுருவ அல்லது இரு முகாம் அரசியலைத் தோற்றுவித்தது. அவ்விரு முகாம அரசியல் என்பது சித்தாந்த ரீதியான வேறுபாடுகளைப் பிரதிபலிக்கும் இடதுசாரி, வலதுசாரி என்ற இருமுனைப்பரிமாணம் கொண்ட சோவியத் முகாம், அமெரிக்க முகாம் என்ற வடிவம் முழு உலகத்தினையும் பிரிவினை செய்திருந்தது. அத்தகைய பிரிவினையில் வளர்ச்சியடைந்த நாடுகள் அநேகமானவை வலதுசாரி முதலாளித்துவ - அமெரிக்க முகாமுக்குள் ஒன்றுகூடும் சந்தர்ப்பத்தில் முதலாம் உலக நாடுகளாக அடையாளப்படுத்தப்பட்டன. பருமட்டான வளர்ச்சி நிலையை கொண்ட இடதுசாரி - சோவியத் அணிக்குள் அகப்பட்டுக் கொண்டதால் அநேகமான நாடுகள் இரண்டாம் உலகநாடுகள் என அடையாளப்படுத்தப்பட்டன. இதனால் இவை இரண்டிலும் சித்தாந்த அடிப்படையில் ஒன்றிணையமுடியாத ஆனால், பல விடயங்களில் ஒற்றுமை கொண்ட ஒருதொகுதி நாடுகள் மூன்றாம் உலகம் என அழைககப்பட்டன. அவை வறியநாடுகளாக இருந்ததுடன், அரசியல் அணியை உருவாக்கும் கொள்கை சாதகமற்றவையாக விளங்கின. இதனால் இரண்டு முகாம் அரசுகளுக்கும் இடையில் பலமான நெருக்கடியை எதிர்கொண்டதுடன், தனித்துவமான சக்தியாக எந்த அரசாலும் எழுச்சியடைய முடியாது என்ற கொள்கையை உருவாக்கியிருந்தது. சமகாலப்பகுதியில் நிலவிய முகாம் அரசியலில் மூன்றாம் உலகத்திற்கும் ஓரமைப்பு அவசியமாகின்றது. அதனால் பலமான பெரிய மக்கள் தொகையைக்கொண்ட இந்தியா அணிசேராமை என்ற கொள்கைக்கு வலுக்கொடுத்ததுடன், அக்கொள்கை சாதகமானதாக மாறியது.



ஈராக்கிய துணை ஜனாதிபதி தகா யாசின் ரமடா அணிசேரா மாநாட்டில் மலேஷியப் பிரதமருடன்

அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் அங்கத்துவ நாடுகளாகப் பெருகியதுடன், தமது நாடுகளில் மாநாடுகளையும், உரையாடல்களையும் உருவாக்கி வந்தன. மூன்றாவது சக்தியாகப் பெருகியதுடன் சனத்தொகையாலும், எண்ணிக்கையாலும் பெரும் அமைப்பாக அணிசேராமை விளங்கியது. ஆனால் யதார்த்த நோக்கில் இடதுசாரி முகாமின் பக்கம் சாய்ந்திருந்ததுடன், மூன்றாம் உலகநாடுகளுக்கு ஒவ்வாத கொள்கையைக் கொண்டிருக்கும் அணியில் சேராதிருப்பது அணிசேராமை என நலிந்த விளக்கம் ஒன்று முன்வைக்கப்பட்டது. முழுமையாகச் சோவியத் பக்கம் சாயும் போக்கை நிராகரித்த பல நாடுகள், வலதுசாரியமைப்புடன் நெருக்கமான உறவைப் பேணியதுடன், அதன உதவியுடனும், அனுசரணையுடனும் பாரிய வளர்ச்சி நிலையை நோக்கி நகர்ந்தது. இராணுவ, தொழில்நுட்ப அடிப்படையிலும், அரசியல் கொள்கைப் போக்கிலும், பொருளாதாரத்திலும் வலதுசாரி முகாமுக்குள் நுழைந்த மூன்றாம் மண்டல அரசுகள் வளர்ச்சி அடைந்தன. இதனால் மேலும் மேலும் பல அரசுகள் முதலாளித்துவ அணிக்குள் நுழையவும், அதனால் இடதுசாரி முகாம் இறுக்கமான கொள்கையைக் கடைப்பிடிக்க முயன்று இறுதியில் அபாயமான இலக்கினை அடைந்ததையும் காணமுடியும்.

மூன்றாம் மண்டல நாடுகளை முதலாளித்துவம் என்ற ஆதிக்க வடிவம் அழித்தது என்பதனைப் போன்று, சோஷலிஸ சித்தாந்தத்தின் அணுகுமுறையும், குருட்டுத்தனமான பின்பற்றுகையும் மூன்றாம் மண்டல நாடுகளைச் சிதைவடையச் செய்ததெனக் கூறலாம். மொத்தத்தில் - முகாம் அரசியலில் காணப்பட்ட இரண்டு முகாம்களுமே பின்தங்கிய நாடுகளின் சிதைவுக்குப் பின்னணியாக விளங்கியவை என்று கூறுவதில் தவறேதும் இல்லை எனலாம்.

அணிசேராமை என்ற கொள்கை ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து முகாம் அரசியல் முடிவுக்கு வரும்வரை பெயரளவிலேனும் அர்த்தம் பொதிந்ததாக விளங்கியது. நடைமுறையில் முதலாளித்துவமும், சோஷலிஸமும் மாறி மாறிச் செல்வாக்குச் செலுத்தியநிலை காணப்பட்டாலும், இரண்டு அணிக்கும் அப்பால் ஓரணியுண்டு என்ற வடிவத்தினை ஏற்படுத்தியதில் வெற்றிகண்டது. ஆனால் இருதுருவ அரசியல் போட்டி முடிவுக்கு வந்த பிற்பாடும் அணிசேராமை நிலையாக உள்ளதெனக் கருதப்படுவது யதார்த்தத்திற்குப் பொருத்தப்பாடுடையதெனக் கூறுவது கடினமானது. ஏனெனில், 1989 ஆண்டு சோவியத் முகாம் வீழ்ச்சி, முதலாளித்துவ முகாமின் மறுசிந்தனைக்கு வழிவகுத்தது. முதலாளித்துவத்தின் உலகளாவிய கொள்கைக்குப் பின்னால் அணிசேர்ந்திருப்பதனையே காட்டுகின்றது. அத்தகைய போக்கில் அணிசேராமை என்பது கேள்விக்குரியதாகிவிட்டது. இத்தகையநிலை ஏற்பட்டதற்கு முகாம் அரசியல் வீழ்ச்சிநிலை மட்டுமல்ல. அணி சேராமைக்குள்ளிருந்தே அதன் கொள்கைகளுக்கும், இயல்பான வளர்ச்சிக்கும் ஆபத்து நிகழ்ந்துள்ளது. குறிப்பாக, அணிசேராமையின் உறுப்புநாடுகள் அனைத்துமே அமெரிக்க தலைமையிலான வலதுமுகாமின் செல்வாக்குக்குள் உட்பட்டவையேயாகும். அவ்வாறு செல்வாக்குக்குள் இருக்கும் நாடுகள், கொள்கையடிப்படையில் அணிசேராமை எனக் கூறுவது பொருத்தப்பாடற்றது.

அடுத்து, அணிசேராமை நாடுகள் தமக்குள் கொண்டிருக்கும் போட்டித்தன்மை, முரண்பாடுகளை என்றுமே கைவிட மறுக்கும் தலைமைகள், அதனால் ஏற்படும் அரசியலை விருத்திபெற்ற நாடுகள் கையாளமுயல்வது எனப் பல விடயங்கள் அணிசேராமை அமைப்பை முடிவுக்கு கொண்டு வந்துள்ளது.


கியூப ஜனாதிபதி பிடல் காஸ்ரோ கோலாலம்பூர் வந்தபோது மலேஷியப் பிரதமரால் வரவேற்கப்படுகிறார்.

குறிப்பாக, அண்மையில் கோலாலம்பூர் மாநாட்டில் - காஷ்மீர் விவகாரமும், பாலஸ்தீன விடுதலைப் போராட்ட விவகாரமும் ஒன்றெனப் பாகிஸ்தானால் கருதப்பட்டு, மாநாட்டில் கருத்துப் பரிமாற்றம் நிகழ்த்தப்பட்டது. அதனை நிராகரித்த இந்திய அரசியல் தலைமை - பாலஸ்தீன விவகாரம் வேறு, காஷ்மீர் விவகாரம் வேறு எனக் கூறிவிட்டது. ஆனால் சாதாரணமான நிலையில் இரண்டு மக்களுமே தமது சுயநிர்ணயத்திற்கும், சுதந்திரத்திற்குமாகவே போராடுகின்றனர் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட அம்சமாகும். இரண்டு மக்களும் தனியான அரசமைப்பதை விட, கௌரவமான பிரஜைகளாகத் தாம் மதிக்கப்படவேண்டும் என்பதற்கான நிலையில் செயல் படுபவர்கள். அவர்களை வைத்து இந்தியர்களும், பாகிஸ்தானியரும் தமக்கிடையேயுள்ள நீண்டகால மனித முரண்பாடுகளைத் தீவிரப்படுத்தி ஆபத்தான நிலையை ஏற்படுத்த முனைகின்றனர். காஷ்மீ மக்களின் போராட்டத்தை ஏற்றுக்கொண்டு அந்த மக்களுக்குரிய உரிமையை, சுதந்திரத்தை வழங்கும் திராணியற்ற இந்தியாவும், பாகிஸ்தானும் - அரசியல் லாபத்திற்காக மக்களைப் பயன்படுத்துகின்ற போக்குக் காணப்படுகின்றது. பாகிஸ்தான் என்ற அரசு, உலக வரைபடத்தில் இல்லாதிருந்திருக்குமாயின் - பாரதிய ஜனதா அரசாங்கத்தினையோ, பலமான இந்தியாவையோ கண்டிக்க முடியாது. அதே போன்றுதான் பாகிஸ்தானுக்கும் . எனவே அரசியல் நகர்வுகளுக்கான சிந்தனை வளர்கின்றதே அன்றி- மக்களின், தேசத்தின் யதார்த்த நிகழ்வுக்காக அரசியல் வடிவமைக்கப்படுவதில்லை. அணிசேராமை என்ற முகாமை போட்டுவிட்டு- புஷ்ஷையும், பிளயரையும் அணைத்துக் கொள்ளும் அரசியல்தான் தற்போது காணப்படுகின்றது.

அணிசேராமை என்பது வலுவான சக்தி என்பது யாராலும் மறுக்க முடியாதொன்றாக உள்ளது. ஆனால், அதன் பணிகள் ஆபத்தானவையாகவும் -நாட்டுக்கும், மக்களுக்கும் பயனுடையவையாகவும் அமைந்திருத்தல் அவசியமாகும். இன்றைய சூழலில் அமெரிக்க எதிர்ப்பைக்காட்ட மிக இலகுவான அமைப்பு அணிசேராமையாகும். ஏனெனில், அமெரிக்க உற்பத்தியால் குவிந்துள்ள தேசங்கள் - ஆசிய, ஆபிரிக்க, தென்னமெரிக்கக் கண்டம் என்றால் மிகையாகாது. ஈராக் மீதான போரைத் தனித்து புஷ்-பிளயர் நடாத்துவதென முடிவெடுத்தால், இரு நாடுகளதும் எதிர்காலம் தனித்ததாகவே அமையுமென்ற நம்பிக்கையை அணிசேரா நாடுகள் ஏற்படுத்தவேண்டும். அவ்வாறான அமெரிக்க எதிர்ப்பு வாதம் பொருளாதார, இராணுவ, வர்த்தக மட்டத்தில் எழுதல்வேண்டும். அத்தகைய சூழலுக்காக அணிசேரா மாநாடு கூடியிருந்ததால் நன்றாக அமைந்திருக்கும். சாதகமான விளைவை உருவாக்கியிருக்கும். போலியையும், ஏமாற்றையும், அரசியல் அநாகரிகத்தையும் காட்டுவதற்காக எத்தனை அணிசேரா மாநாடு கூடினாலும் அர்த்தம் பொதிந்ததாகவோ வலுவானதாகவோ அமையாது.

**கே.ரி.கணேசலிங்கம்**

## எழுதுவினைஞர் அதி சிறப்பு வகுப்புக்கு ஐந்து பேரையே நியமிக்கத் திட்டம்!

### யாழ். வெற்றிடங்களை நிரப்ப அதிகாரிகள் பின்னடிப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த வருடம் ஜூன் மாதம் நடைபெற்ற மாகாண எழுதுநர் சேவையின் அதிசிறப்பு வகுப்பிற்கு நியமிப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில், எழுதுநர் சேவையின் அதிசிறப்பு வகுப்பிற்கான வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. இதன்படி தற்போது வட - கிழக்கு மாகாணத்தில் 05 வெற்றிடங்களே நிரப்பப்பட உள்ளன.

ஆனால், யாழ்.மாவட்டத்தில் மாத்திரம் 13 வெற்றிடங்கள் உள்ளன. ஏனைய மாவட்டங்களிலும் வெற்றிடங்கள் காணபபடுகின்றன. இதில் யாழ். மாவட்ட பிரதேசசபைகளில் 8 வெற்றிடங்கள் பல வருடங்களாக நிரப்பப்படாமல் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

கடந்தமுறை நடைபெற்ற மேற்படி பரீட்சையின் அடிப்படையில் - நீர்வேலி, நல்லூர், வல்வெட்டித்துறை, யாழ்ப்பாணம், சாவகச்சேரி ஆகிய உள்ளூராட்சி மன்றங்களில் இருந்த வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன. ஆனால், இம்முறை இப்பரீட்சையின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றங்களின் வெற்றிடங்கள் நிரப்பப்பட முடியாதெனவும், அவ் வெற்றிடங்கள் இலங்கை நிருவாக சேவைக்குரிய வெற்றிடங்கள் எனவும் அதற்குக் காரணம் கூறப்படுகின்றது.

வட - கிழக்கு மாகாணத்தில் 400 இற்கு மேற்பட்ட பரீட்சார்த்திகள் இப்பரீட்சைக்குத் தோற்றியிருந்தனர். இவர்களில் 20 இற்கு மேற்பட்டோர் 200 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருந்தும், 05 வெற்றிடங்களே நிரப்பப்பட இருப்பது சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மத்தியில் விசனத்தைத் தோற்றுவித்திருப்பதாகத் தெரியவருகின்றது.


கடந்தமுறை நடந்த பரீட்சையில் 190 புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற 14 பேருக்கு நியமனங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ICC Cricket World Cup SOUTH AFRICA 2003



# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003







① அடித்தாடும் விஷாட்.

② அரைச் சதம் அடித்த அன்டி பிளவர்.

③ சிம்பாப்வே ஜனாதிபதிக்கு மைதானத்தில் ஒரு எதிர்ப்பு.

# இந்தியாவுக்கு வரம்

இந்தியா - இங்கிலாந்துக்கு இடையிலான ஆட்டங்கள் பற்றி யாரும் எதிர்வுகூற முன்வரவில்லை. ஏனெனில், இரண்டு அணிகளும் பலமான அணிகள் என்பதை அறிந்திருந்ததுடன், இந்தியா தன் பலத்தைக் காண்பித்திருந்ததும், இங்கிலாந்து - பாகிஸ்தானை அதிரடியாகத் தோற்கடித்திருந்ததும் ரசிகர்கள் மத்தியில் ஒரு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. அதோடு, SUPER SIX இற்குள் போவது என்றொரு பிரச்சினையும் அந்தந்த அணிகளுக்கும் விசேடமாக, அந்தந்த அணிகளின் ரசிகர்களுக்கும் - இருந்தன.



ரொனி இரானி - அட்டகாசம் மட்டுந்தான்.

# இங்கிலாந்தின் சாபம்

ஆட்டம், KINGSMEAD மைதானத்தில் நடந்ததும், ஒரு பொருத்தம்தான். யார் KING நஸாரா? கங்கூலியா? கங்கூலி துடுப்பாடத் தீர்மானித்ததும் அதற்கேற்ப, சச்சினும், ஷேவாக்கும் ரன் குவித்ததும், பின்னர் திடீரென FLINTOFF பந்துவீச வந்ததும், அப்படியே RUN RATE ஐ ஒரு அமுக்கு அமுக்கியதும், பின்னர் யுவராஜ் சிங் மிகப் பெறுமதியான 42 ஓட்டங்கள் எடுத்ததும், இதற்கெல்லாம் மேலாக ட்ராவிட் ஒரு சங்கிலியாக நின்று கோர்வை முறிந்துவிடாமல் மெல்ல மெல்ல பின்னர் அதிரடியாக 62 ஓட்டங்கள் பெற்றதும், இந்தியாவை 250 ஓட்டங்களில் கொண்டு வந்து நிறுத்தியது. இப்பொழுதும் கூட ரசிகர்கள் எந்த அணி KINGSMEAD இல் முடிசூடும் என்று எதிர்வுகூறமுடியவில்லை.



டிரெக்ஸ்கொதிக் - மந்தநிலையில்.

ஆனால், இங்கிலாந்து துடுப்பெடுத்தாட ஆரம்பித்தபோதுதான், இந்தியா உண்மையில் விளையாட ஆரம்பித்தது (நஸாருக்கு விதி விளையாட ஆரம்பித்தது). சிறிநாத், மற்றும் ஷாஹீர் கானின் துல்லியமான பந்துவீச்சு இந்தியாவின் வெற்றிக்குக் கட்டியங்கூறுவதுபோலவே அமைந்துவிட்டது. இந்த இடைவெளியில் நெஹ்ராவின் அதிர்ஷ்டம் சிரிக்க ஆரம்பித்தது. அவரின் திறமையில் எவ்விதக் குறையும் கூறமுடியாவிட்டாலும், அதிர்ஷ்டமும் சேர்ந்தே அன்றைய தினம் விடிந்தது என்பதையும் ஒப்புக்கொள்ள வேண்டும்.

அது ஒருபுறமிருக்க, இந்தியா, இங்கிலாந்தை வென்ற MARGIN கவனிக்கத்தக்கது. இங்கிலாந்து குறைவான அணியல்ல. ஆனால், இங்கிலாந்தை வீழ்த்திய இந்திய அணியின் அபார ஆட்டத்தைப் பாராட்டியே தீரவேண்டும். 168 ஓட்டங்களுக்கு இங்கிலாந்தை, இந்தியா சுருட்டியது என்பது "ஒதுக்கப்பட்டவர்கள்" நாங்கள் ஓங்கியே தீருவோம் என்ற கங்கூலி AND Co வின் தன்னம்பிக்கையை, திடசங்கற்பத்தைக் காட்டுவதாகவே கொள்ள வேண்டும்.


மறுவளமாக, இங்கிலாந்தின் ஆத்மாவில் விழுந்த அடி, இந்தியாவின் இந்த வீச்சு, பாகிஸ்தான் முகாமில் பல்வேறு கலந்துரையாடல்களுக்குக் களமமைத்திருக்கும். அதேபோன்று, இங்கிலாந்து முகாமில் பல வாதப் பிரதிவாதங்களையும் உருவாக்கியிருக்கும்.

- ஜோசப் கிருஷ்ணா.

இரசிகர்களுக்கு வாழ்த்துக்கள்!

JAFFNA TECHNICAL INSTITUTE ★ SRILANKA ★

# எல்லைச் சமர் இன்று



நெஹ்ரா, சிறிநாத், ஷாகீர் கான், - பாகிஸ்தானை வீழ்த்தும் அம்புகள்.

இந்தியா - கிரிக்கெட் விளையாட்டை மிகவும் ஆக்ரோஷமாக நேசிக்கின்ற ஒரு நாடு. இந்த நாட்டுக் கிரிக்கெட் ரசிகர்கள் மிகவும் தீவிரவாதப் போக்குக் கொண்ட ரசிகர்களாகக் காணப்படுகின்றார்கள்.

தற்போதைய உலகக் கோப்பைப் புள்ளிகள் அடிப்படையில் பிரிவு A இல் Super Six பந்தயத்தில் கிட்டக்கிட்ட நிற்கின்ற அணிகளாக பாகிஸ்தான் மற்றும் இந்திய அணிகள் காணப்படுகின்றன. இந்த இரு அணிகளும் ஆசிய நாட்டுக் கிரிக்கெட் அணிகளானாலும் கூட இவை இரண்டுக்குமிடையில் அரசியல் ரீதியான பூனை - எலி மோதல் கிரிக்கெட்டிலும் வலுப்பெற்றிருப்பதனை மறுக்கமுடியாது.

இந்த இரு அணிகளும் இதன் காரணமாகப் பல காலமாகப் போட்டிகளைத் தவிர்த்து வந்திருக்கின்றன. 1996ஆம் ஆண்டு உலகக் கோப்பைப் போட்டியின்போது பெங்களூர் சின்னசாமி ஸ்டேடியத்தில் நடந்த ஒரு போட்டியில் இரு அணிகளும் கிரிக்கெட் வரையறையைவிட்டு சற்று அப்பால் சென்று ஆடியவிதம் இன்றும் ரசிகர்கள் மனக்கண்முன் நிற்கின்றன.

சச்சின் என்றால் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களுக்கு இன்றும் ஒருவிதமான காய்ச்சல் இருப்பதை மறுக்க முடியாது. அதேபோல அன்வர் என்றால் Record என்பதனையும் இந்திய அணி ஒருதரம் நினைத்துப் பார்க்கத்தான் வேண்டும்.



அப்ரீடி - வன்முறை வேண்டாம். டிராவிட் - Keeping வேண்டாதவேலையா?

ஆனால் ICC, கணக்காக இன்று 1ஆம் திகதி இரண்டு அணிகளையும் மோதவைத்திருக்கின்றது. இன்று நடைபெறுகின்ற இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டி Super Sport Park மைதானத்தில் G.M.T நேரப்படி 8 A.M. இற்கு ஆரம்பமாகின்றது.

இன்றைய போட்டிக்கு மைதான மத்தியஸ்தர்களாக RE.KOERTZEN, DR.SHEPHERD ஆகியோர் கடமையாற்றுகின்றார்கள். அத்துடன், மூன்றாவது மத்தியஸ்தராக B.F.BOWDEN கடமையாற்றுகின்றார். நான்காம் நிலை மத்தியஸ்தராக CJ.PICKETT உம் மைதான நடுவராக MJ.PPROCTER உம் கடமையாற்றுகின்றார்கள்.

இதிலொரு சிறப்பு இருக்கிறது, என்னவென்றால், இன்று இரு அணிகளும் ஏதேனும் குளறுபடிகள் செய்ய முற்பட்டால் கிழவர் David Shepherd இடம் தப்பமுடியாது.

கிரிக்கெட்டின் தொடக்குநர்கள் என்று வர்ணிக்கப்படுகின்ற இங்கிலாந்து அணியை ஆசீஸ் நெஹ்ராவினை வைத்துத் தொலைத்துக்கட்டிய இந்தியா இன்று நெஹ்ராவினை நம்பினால் அதலபாதாளந்தான். இந்திய அணிக்கு வேகமான ஓட்டக்குவிப்பு மிகவும் அவசியம். பொதுவாக முதலில் Batting செய்கின்ற அணிகளுக்குத்தான் வெற்றி வாய்ப்பு மிகவும் பிரகாசமாக உள்ளது. அதற்குத் தென்னாபிரிக்க ஆடுகளங்களின் தொழில்நுட்பவல்லுநர்கள் பின்வருமாறு கூறுகின்றார்கள்,

பொதுவாக கூடுதலான மைதானங்கள் கடற்கரையோரமாகக் காணப்படுகின்றன. இந்த மைதானத்தின் மண் அமைப்பு மிகவும் சொரசொரப்பாகக் காணப்படுகின்றது. ஆகவே, Pitch இரண்டாவது Bowling இற்கு மிகவும் சாதகமாக இருக்கும் என்கிறார்கள் அவர்கள்.

அன்று இங்கிலாந்துடன் எழுச்சி கொண்ட இந்திய வீரர்கள், பாகிஸ்தானை எவ்வாறு வெல்லப் போகின்றார்கள்?

பாகிஸ்தான் அணி பலமான அணியாகவிருந்தாலும் இதனுடைய Batting மற்றும் Bowling வரிசையில் ஒரு தொய்வு காணப்படுகின்றது. 500 இற்கு மேல் ஒருநாள் போட்டி விக்கெட்டுக்களை அள்ளிய வாசீம் அக்ரத்தின் பந்துவீச்சு அவ்வளவு சிறப்பாக இல்லை. அதேவேளை, அக்தார் வேகத்தை அதிகரித்திருக்கின்றாரே ஒழிய, விக்கெட்டினைக் கைப்பற்றுவது என்பது மிகவும் குறைவாகவே உள்ளது. அப்ரீடியின் பொறுப்பற்ற ஆட்டம், இன்சமாம் உல் ஹக்குடைய சோர்வான துடுப்பாட்டம் எல்லாம் பாகிஸ்தான் அணி தோற்பதற்கான இரகசியங்கள். இந்திய அணி ஆரம்பத்தில் சோர்வாகக் காணப்பட்டாலும், தற்போது குளுக்கோஸ் ஏற்றிய I.C.U Case போல உள்ளது என்பது உண்மைதான்.

எது எப்படியிருந்தாலும், இப்போட்டி இந்திய - பாகிஸ்தான் கிரிக்கெட் போட்டி போல மட்டும் இருக்காது, வாஜ்பாய் - முஷாரப் மோதல் போன்றும் இருக்கும் என்பதில் மறு பேச்சு இல்லை. Take it Easy!

பஞ்சநாதன் சுதர்சன்

## நாளும் ஒரு வினா

**1999 வரையான உலகக் கிண்ணப் போட்டிகளில் கூடிய ஆட்டமிழக்கச் செய்த விக்கெட் கீப்பர் யார்?**

**மொயின் கான் (பாகிஸ்தான்) 30 ஆட்ட இழப்புகள்.**

# உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

## சிம்பாப்வே எதிர் நெதர்லாந்து அணி

### சிம்பாப்வே அணி

| | | |
|---|---|---|
| விஷாட் | C சிமித் b லெஃவபர் | 21 |
| வேர்மியூலன் | b குளொப்பன்பேர்க் | 27 |
| அன்டி பிளவர் | C எஸ்மியர் b ஷிவேர்லி | 71 |
| விட்டல் | C ஜியூடெறன்ட் b குளொப்பன்பேர்க் | 30 |
| இப்ராஹிம் | C டீ லீட் | 32 |
| பிலிக்நோட் | C குளொப்பன்பேர்க் b ஷிபேர்லி | 58 |
| ஸ்ரீக் | C எஸ்மியர் b டீ லீட் | 44 |
| மெரிலியர் | Lbw b லெஃவபர் | 01 |
| டைபூ | not out | 07 |
| உதிரிகள் | | 10 |
| மொத்தம் 8 விக்கெட் இழப்புக்கு (50 ஓவர்கள்) | | 301 |

### பந்து வீச்சு - நெதர்லாந்து அணி

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| ஷிவேர்லி | 10 | 2 | 43 | 2 |
| லெஃவபர் | 8 | 0 | 38 | 2 |
| டீ லீட் | 7 | 0 | 69 | 2 |
| குளொப்பன்பேர்க் | 10 | 0 | 40 | 2 |
| எஸ்மியர் | 9 | 0 | 60 | 0 |
| வேன் பங்க் | 3 | 0 | 22 | 0 |
| ஜன் மொல் | 3 | 0 | 26 | 0 |

### நெதர்லாந்து அணி

| | | |
|---|---|---|
| குளொப்பன்பேர்க் | C ஸ்ரீக் b ஹொண்டோ | 18 |
| ஷிவேர்லி | b ஸ்ரீக் | 22 |
| ஜியூடெறன்ட் | run out | 15 |
| வேன் பங்க் | LBW b விட்டல் | 37 |
| டீ லீட் | LBW b மோர்பி | 01 |
| வேன் ட்ரூஸ்ட் | C ஹொண்டோ b மோர்பி | 26 |
| சொல்ட் | C பிளிக்நோட் b மோர்பி | 07 |
| ஜன் மொல் | C Sub b மெரிலியர் | 23 |
| லெஃவபர் | b மெரிலியர் | 30 |
| ஸ்மிட்ஸ் | not out | 05 |
| எஸ்மியர் | not out | 06 |
| உதிரிகள் | | 12 |
| 9 விக்கெட்டுக்களை இழந்து (50 ஓவர்கள்) | | 202 |

### பந்து வீச்சு - சிம்பாப்வே அணி

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| பிலிக்நோட் | 10 | 1 | 30 | 0 |
| ஸ்ரீக் | 10 | 1 | 36 | 1 |
| ஹொண்டோ | 6 | 1 | 16 | 1 |
| மோர்பி | 10 | 3 | 44 | 3 |
| மெரிலியர் | 9 | 0 | 49 | 2 |
| விட்டல் | 5 | 1 | 19 | 1 |

நெதர்லாந்து அணியை சிம்பாப்வே அணி 99 ஓட்டங்களால் வென்றது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homelan

# புதிய வியாபார வசதிகளுக்கு பாக்கு நீரிணையூடாக பாலம்

## 'இந்திய டுடே' கருத்தரங்கில் பிரதமர் ரணில்

(புதுடெல்கி)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாக்குநீரிணை ஊடாக பாலம் ஒன்றை அமைப்பதன் மூலம் புதிய வியாபார வசதிகளை ஏற்படுத்தும் திட்டமொன்று இருப்பதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புதுடெல்கியில் 'தாஜ்பலஸ்' ஹோட்டலில் நேற்றிரவு நடைபெற்ற 'இந்தியா டுடே' சஞ்சிகையின் கருத்தரங்கில் பங்குபற்றி உரையாற்றிய போதே பிரதமர் ரணில் இத்திட்டம் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். 'இந்தியா டுடே' சஞ்சிகையின் அழைப்பின் பேரில் சென்ற பிரதமர், நேற்று நடைபெற்ற கருத்தரங்கில், இந்தியாவைப் பற்றிய இலங்கையின் கண்ணோட்டம் - 'ஜாம்பவானா அல்லது பலவீனமானா' என்ற தொனிப்பொருளில் உரையாற்றினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் -

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவுகளின் தெளிவான சின்னமாக இராமேஸ்வரத்துக்கும் தலைமன்னாருக்கும் இடையே நிர்மாணிக்கத் திட்டமிட்டுள்ள பாலத்தைக் குறிப்பிடலாம். பண்டைக்காலத்திலும் எமது இருநாடுகளையும் இணைக்கக்கூடிய விதத்தில் பாக்கு நீரிணையில் ஒரு பாலம் இருந்தது. இத்திட்டம் பூர்த்தியடைந்தவுடன் இலங்கைக்கும் தென்னிந்தியாவுக்கும் இடையில் வியாபாரம் இன்னும் குறைந்த செலவில் அமையும்.

நாம் கொழும்பிலிருந்து தென்பகுதிக்கு பாதையொன்றை ஏற்படுத்தவுள்ளோம். அத்துடன் புதிய துறைமுகம் ஒன்றையும் தென்முனையில் ஏற்படுத்துவோம். அதன்மூலம் புதிய வியாபாரங்களை ஏற்படுத்தலாம் என்பதுடன் தென்னிந்தியத் துறைமுகங்களுடன் வியாபாரம் செய்வதும் ஊக்குவிக்கப்படும். பெங்களூர், சென்னை வரையிலும் இறுதியாக மும்பாய் வரையிலுமான பாதை இணைப்பு இருதரப்புக்கும் புதிய வியாபார வசதிகளை உருவாக்கும். இரண்டு நாடுகளுக்கும் வெற்றி என்ற நிலை உருவாகும். இவ்வாறானதொரு திட்டம் மூலமாக பல புதிய தொழில் வாய்ப்புக்கள் ஏற்பட்டு, இரு தரப்புக்கும் பாரியளவிலான வியாபார வசதிகள் ஏற்படும்.

தென்னிந்தியாவிற்கு கொழும்புத்துறைமுகம் மூலமாகவும், திருகோணமலை மூலமாகவும் கடல் மார்க்கமாக வியாபாரம் செய்வதால் ஏற்படும் செலவை இதன்மூலம் குறைத்துக் கொள்ளலாம். முக்கியமாக தென்னிந்தியாவுக்கு இதன் மூலம் பெருமளவு நன்மைகள் ஏற்படவுள்ளன.

இலங்கைக்கு இதன்மூலம் மேலதிக வேலைவாய்ப்புக்களும் வியாபார வாய்ப்புக்களும் கிடைப்பதுடன் அதிகரித்த பொருளாதார நிலைமையையும் பெறலாம்.

தென்னிந்தியப் பொருளாதாரமும் இலங்கைப் பொருளாதாரமும் ஒருவருக்கொருவர் நிறைவை உண்டாக்கிக் கொள்கின்றன என்றார்.

(லி)

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003
### இன்றைய ஆட்டங்கள்

கென்யா Vs பங்களாதேஷ் - The Wanderers, Johannesburg- 2 pm.
இந்தியா Vs பாகிஸ்தான் - Super Sports Park, Centurion - 2 pm

# அடுத்த சுற்று பேச்சு விபரம் ஊடகங்களுக்கு இல்லை

## அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

இனிவரும் காலத்தில் புலிகளுடன் நடத்தப்படவுள்ள பேச்சுக்களின்போது, முக்கியமானதும் பிரச்சினைக்குரியதுமான விடயங்கள் ஆராயப்படவுள்ளன. அத்தகைய கட்டத்துக்குப் பேச்சுக்கள் நகர்ந்துள்ளன. இதில் எடுக்கப்படும் முடிவுகள் குறித்து ஊடகங்களுக்குத் தகவல் வெளியிட முடியாது என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

இப்போதுள்ள சூழலில் அரசாங்கம், புலிகளுடன் நடத்துகின்ற பேச்சுக்களின் விபரங்கள் ஊடகங்களில் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால், உலக நாடுகளில் நடந்த பல்வேறு சமாதானப் பேச்சுக்களில் அவ்வாறு நடைபெறவில்லை.

வட அயர்லாந்துப் பேச்சுக்களின் போது அதில் பேசப்பட்ட விடயங்கள் மக்களுக்கோ ஊடகங்களுக்கோ தெரிந்திருக்கவில்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

அடுத்த சுற்றுப் பேச்சுக்களில் காணிகள், நிதிப் பிரமாண நடைமுறைகள், அதிகாரப் பரவலாக்கல், பொலிஸ் போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### உலக வங்கி...

வையிட்டனர்.

இக்குழுவில் உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி பீற்றர் கறோல், மற்றும் சுரேஸ் துரைச்சாமி, உலகவங்கியின் நிர்வாகப் பணிப்பாளர் சங்மான் - சாங் ஆகியோர் உள்ளடங்கியிருந்தனர்.

### வடக்கு - கிழக்கு...

மீள்குடியற்றம், புனர்வாழ்வுப் பணிகள், மிதிவெடி அகற்றும் செயற்பாடுகள், கட்டுமானப்பணியில் ஈடுபடுவர்களுக்கான ஊதியம் என்பவற்றுக்கும் இந்த நிதியம் உதவி வழங்கும்.

நிதியச் செயற்பாடுகளை சுதந்திரமாகக் கண்காணிக்கவும் சுதந்திரமான கணக்காய்வு மேற்கொள்ளவும் உலகவங்கி ஏற்பாடுகளை மேற்கொள்ளவுள்ளது.

# 15 செயற்திட்டங்கள்; சிறான் அங்கீகாரம்

வட- கிழக்குப் பகுதிகளில் மேற்கொள்ளப்படவிருக்கின்ற பதினைந்து உடனடி மனிதாபிமான புனர்வாழ்வுச் செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதற்கு நேற்றும், நேற்றுமுன்தினமும் நடைபெற்ற சிறான் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

வட- கிழக்குப் பகுதியில் மாவட்டங்கள் தோறும் நியமிக்கப்பட்ட தேவை மதிப்பிட்டுக் குழுக்களினால் அடையாளம் காணப்பட்டு பின்னர் சிறான் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட பதினைந்து செயற்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. எதிர்காலத்திலும் தொடர்ந்து மாவட்ட தேவை மதிப்பீட்டு குழுக்களின் மூலமாக சமர்ப்பிக்கப்படுகின்ற ஆலோசனைகளையும் செயற்திட்டங்களையும் அடிப்படையாக வைத்து மேலும் பல திட்டங்கள் தாயாரிக்கப்பட்டு சிறானின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றது.

இதில் மன்னாரில் மீள்குடியேற்ற விடயம் முக்கியமானதாக காணப்படுகின்றது.

### ஜெனரல்...

தற்பொழுது, இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள மிலிந்த மொறகொடவிடம் இது கையளிக்கப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜெனரல் நம்பியார், சில தினங்களுக்கு முன்பே பொஸ்னியா சென்று திரும்பியிருந்தார். அவர் அங்கு உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக அதிகாரிகளுடன் கலந்துரையாடினார் எனத் தெரியவருகின்றது.

இதேவேளை, இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இந்திய எதிர்க்கட்சித் தலைவி சோனியாகாந்தியை சந்திக்கவிருப்பதாகவும் தெரியவருகின்றது.

### ஒஸ்ரின் - கருணா...

ருக்கும் இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன்ட் புறூவ் ஹொவ்டே அறிமுகம் செய்துவைத்தார்.

இச்சந்திப்பின்போது கிழக்கில் முஸ்லிம்கள் சொந்த இடத்தில் மீளக்குடியேறல் மற்றும் கைவிடப்பட்ட தமது சொந்த வயல்களில் விவசாயம் செய்யவும் இணக்கம் காணப்பட்டது.

கிளிநொச்சியில் யுனிசெப் உதவியுடன் அமையும் தொழிற்பயிற்சி நிலையத்தில் பாதிக்கப்பட்ட சிறுவர்களைச் சேர்த்துக் கொள்ளவும், இதேபோன்று ஒரு நிலையத்தை கொக்கட்டிச்சோலையில் அமைக்கவும் முடிவுசெய்யப்பட்டது.

இச்சந்திப்பில் ஆட்சேர்ப்பு விவகாரம் குறித்தும் ஆராயப்பட்டது.

அண்மையில் புலிகளினால் கைதுசெய்யப்பட்ட படையினரின் விடுவிப்புத் தொடர்பாகவும் இரு தரப்பினரும் ஆராய்ந்ததாகத் தெரியவருகின்றது.

இந்நிகழ்வுக்கு அரச தரப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ, ஓய்வுபெற்ற பொலிஸ் அத்தியட்சகர் அப்துல் மஜீத், விசேட அதிரடிப் படை, இராணுவ உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர், தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பில மூத்த தளபதி கேணல் கருணா அம்மானும், மட்டு. - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஸ், மட்டு - அம்பாறை மருத்துவத்துறை பொறுப்பாளர் வாமன், விடுதலைப் புலிகள் கல்விப் பொறுபபாளர் வரதன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சந்திப்பின் முடிவில் செய்தியாளர்களிடம் பேசிய கேணல் கருணா,

அமைதி திரும்பி ஒரு வருடமாகியும், வட - கிழக்கில் அபிவிருத்திப் பணிகளெதுவும் முன்னெடுக்கப்படாததால், மக்கள் அதிருப்தியுற்றிருக்கின்றனர். இதனால், அமைதி முயற்சிகளில் அவர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையும் சிதைக்கப்பட்டு வருகிறது என்றார்.

இதேவேளை - நேற்றைய சந்திப்பில், யுனிசெப் பிரதிநிதி ஒருவரும் கலந்துகொண்டமையானது முக்கிய விடயமெனத் தெரிவித்த கருணா,

போரால் பாதிக்கப்பட்ட சிறார்களுக்காக கொக்கட்டிச்சோலையில், தொழிநுட்ப மையம் ஒன்றை அமைக்க யுனிசெப் பிரதிநிதி சம்மதித்ததையும் சுட்டிக்காட்டினார்.

# வட - கிழக்கு அபிவிருத்தி புனரமைப்புக்கு
# மட்டுப்படுத்தப்பட்ட அளவில் திரவப்பணத்தை விடுவிக்கும் அரசு

வட- கிழக்கிற்கான அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்கான திரவப் பணத்தை விடுவிப்பதை அரசு மட்டுப்படுத்தி வருகின்றது.

உலக வங்கி உட்பட நிதி வழங்கும் நிறுவனங்கள் பல, வட - கிழக்கிற்கான அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு செயற்திட்டங்களுக்காக கணிசமான நிதியை வழங்குவதற்கு முன்வந்துள்ளன.

எனினும், இச் செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான நிதியை திரவப் பண வடிவில் விடுவிப்பதற்கு அரசு சில மட்டுப்படுத்தப்பட்ட நடைமுறையை பின்பற்றி வருகின்றது.

இதனால், வட - கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி செயற்திட்டங்களை துரிதகதியில் மேற்கொள்ள முடியாத நிலை தோன்றியுள்ளது.

மத்திய வங்கி உயர் அதிகாரிகளின் ஆலோசனையின் அடிப்படையிலே அரசு மேற்படி திரவப் பணப் பாய்ச்சலை மட்டுப்படுத்தும் நடவடிக்கையை மேற்கொள்வதாகத் தெரியவருகின்றது.

(க,லி)

# விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும்; சமாதான முயற்சியில் திருப்தியில்லை!

## பொ.ஐ.மு. பேச்சாளர் சரத் அமுனுகம

விடுதலைப் புலிகளுடன் பேச வேண்டும் என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்கின்றார்கள். ஆனால், தற்போதைய சமாதான முயற்சிகள் குறித்து திருப்தி கொள்ள முடியாது.

- இவ்வாறு பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். கொழும்பில் நடந்த செய்தியாளர் மகாநாட்டிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சிறிலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகியன தமக்கிடையில் கைச்சாத்திடப்படவுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை தற்போது தயாரித்து வருகின்றன.

இந்த உடன்படிக்கைக்கான ஆவணம் எதிர்வரும் 4 ஆம் திகதி மக்கள் விடுதலை முன்னணியிடம் கையளிக்கப்படும். இரு தரப்புகளும் அது குறித்து கலந்துரையாடி, கட்சிகளின் நிறைவேற்றுக் குழுக்கள் அங்கீகரிக்கப்பட்ட பின்னர் கைச்சாத்திடப்படும் என்றார்.

### உடன்பட்ட...

டைய மக்களின் பிரச்சினைகள், மக்களுடைய உணர்வுகள், அவர்களுடைய நம்பிக்கையீனங்கள் அனைத்தையும் வலியுறுத்தக் கூடிய இடங்களில் எல்லாம் வலியுறுத்தி வருகின்றோம்.

நேற்று நடந்த பேச்சுக்களின் போது, எங்கள் மக்களுடைய நிலைப்பாடுகள் தொடர்பாக இறுதியாகத் தெரிவித்திருக்கிறோம். அத்துடன், இம்முறை உலக வங்கியோடு ஒரு மீள் ஏற்பாடாக இரு தரப்பும் ஒப்பமிட்டு இணக்கப்பாடு கண்டுள்ளோம்.

மிக விரைவில், சில வேலைத் திட்டங்கள் எல்லா மாவட்டங்களிலும் தொடங்கவுள்ளோம். இதே வேளை - தமிழ் மக்கள் வாழும் சகல மாவட்டங்களிலும் படைத்தரப்பால் கெடுபிடிகளும், நெருக்கடிகளும் அதிகரித்து வருகின்றது. இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும், நோர்வே அரசுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம். அடுத்த கட்டப் பேச்சவார்த்தையில் இது தொடர்பாக பேசவுள்ளோம் என்றும் அரசியற்துறைப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

## உலகக்கோப்பை கிரிக்கெட் - 2003

# மேற்கிந்தியத்தீவுகளை இலங்கை வென்றது

(டேர்பன்)

உலகக் கோப்பைக் கிரிக்கெட் போட்டியில் நேற்று நியூலன் ஹேப்ரவுணில் நடைபெற்ற இலங்கைக்கும் மேற்கிந்தியத்தீவுக்கும் இடையிலான ஆட்டத்தில், 6 ஓட்டங்களால் இலங்கை வெற்றியீட்டியது.

முதலில், துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றது. சனத் ஜயசூரிய 66 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி,

50 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 222 ஓட்டங்களைப் பெற்றது. மேற்கிந்திய அணி சார்பில் சந்தர்போல் 65 ஓட்டங்களைப் பெற்றார். இந்த வெற்றி மூலம் இலங்கை அணி **Super Six** இற்குள் செல்லும் வாய்ப்பு உறுதிப்படுத்தப்பட்டது.

## நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:-

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.47 | 97.05 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 157.43 | 158.95 |
| 1 யூரோ | 104.10 | 105.20 |
| 1 சுவிஸ் பிராங் | 70.81 | 71.04 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 56.73 | 57.72 |
| 1 ஜப்பானிய யென் | 00.80 | 00.81 |
| 1 சவூதி றியால் | 25.83 | 25.83 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 01.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.